**CHARTERED ACCOUNTANCY**
**CAB II ENGLISH MEDIUM**
**STARTED ON 09.02.2012**
**VEAL BUSINESS COLLEGE**
Contact : 0777 555 738

மாசி மாதம் 04ம் திகதி
February 16, 2013

# மலைமுரசு
MALAIMURASU

அறைவு 01 இயம் 30

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# திருக்கோணேஸ்வரத்தில் கண்டுபிடிக்கப்பட்டதா? சோழர்கால நந்தி...



(7ம் பக்கம்)

# திருமலை எல்லை நிர்ணயக்குழுவில் தமிழர் உள்வாங்கப்படாமை முறைகேடாகும்

– துரைரெட்ணம் –

(2ம் பக்கம்)

# பெரும்பாக திருக்கோணமலை ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கந்தளாய்க் குளத்துடன் இணைந்ததாக புதிதாக உருவாக்கப்பட்ட மிகப்பெரிய நீர்வழங்கல் திட்டத்தினை அண்மையில் திருக்கோணமலைக்கு வருகை தந்திருந்த சனாதிபதி ஆரம்பித்து வைத்தார். இத்திட்டத்தி-னூடாக திருக்கோணமலை மாவட்டத்தில் சுமார் (7ம் பக்கம்)



## முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு நாம் பொறுப்பல்ல

– பொதுபலசேனா –

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற இனவாத செயற்பாடுகளுக்கு தாம் பொறுப்பல்ல என்று பொதுபலசேன அமைப்பு... (2ம் பக்கம்)

## காவல் துறையின் தாக்குதலுக்கு உள்ளானவர் வைத்தியசாலையில் அனுமதி



மூதூர் பிரதேச இளைஞ ரொருவர் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (7ம் பக்கம்)

## ஈ.பி.எவ் செலுத்தாத இலங்கைப் போக்குவரத்துச் சபை



இலங்கைப் போக்குவரத்துச் சபையின் திருமலை மாவட்ட அலுவலகம் தமது ஊழியர்களின் ஈ.பி.எவ் பணத்தை லுெத்தத் தவறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன. (7ம் பக்கம்)

## ஆசிரிய இடமாற்றத்தில் முறைகேடு ???

அண்மையில் திருக்கோணமலை வலயக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் ஆசிரிய இடமாற்றத்தில் முறைகேடு நடந்துள்ளதாக மலைமுரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

தம்பலகமம் குளக்கோட்டன் தமிழ் வித்தியாலய கணித ஆசிரியை ஒருவர் அப்பாடசாலை (7ம் பக்கம்)

## தங்கம் தோண்டிய லெப்டினன் கேணல் கைது



புலிகள் புதைத்த தங்கத்தை முல்லைத் தீவு மற்றும் வெள்ளை முள்ளி வாய்க்கால் பகுதிகளில் தோண்டித் தேடிய கிழக்கு இராணுவக் கட்டளைப் பீடத்தில்... (7ம் பக்கம்)

## சீனக்குடா விமானப் படைத்தளத்தில் தகவல் தொழில்நுட்ப கூடம்...

சீனக்குடா விமானப் படைத்தளத்தில் பணியாற்றும் அனைவருக்கும் தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் நோக்குடன் புதிய தகவல் தொழில்நுட்ப கூடம் ஒன்று 06.02.2013 அன்று.. (7ம் பக்கம்)

## வெள்ளம் அழித்த நெற்செய்கை

**ஏக்கர்கள் – 74,463**

**மொத்த நட்டம் – 965 மில்லியன்**

கடந்த காலத்தில் ஏற்பட்ட பாதகமான வானிலையால் இலங்கையின் கிழக்கு மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 74,500 ஏக்கர் நெற்பயிர் நிலங்கள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. அத்துடன் சுமார் 836 நீர்ப்பாசன திட்டங்களும் அழிவடைந்துள்ளன.

## கிழக்கு மாணவனின் சலனப்படம் உலகப்போட்டியில் வெற்றி



(7ம் பக்கம்)

## நாளை அரங்காடல் வெளி –08ம், மாயனின் சிறுகதைத் தொகுதி வெளியீடும்

நாளை காலை 9 மணிக்கு தி/இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் கலை கலாசார அவிபிருத்தி மையத்தின் அரங்காடல் வெளி-08 நிகழ்கிறது.

நிகழ்வில் செல்வி. நவசஞ்சிதாவின் தமிழ்மொழி வாழ்த்து. மங்கல விளக்கேற்றல், திருமதி. கோ. சதீஸ்குமார் அவர்களின் செல்வ இசை நடனசபா மாணவிகளின் நடனம், உவர்மலை கலைக்கோவில் நடனப்பள்ளி மாணவர்கள் செல்வி. அ. ஜெகதீஸ்வரி அவர்களின் வழிகாட்டலில் வழங்கும் நடனம், TinyTots முன்பள்ளி மாணவர்களின் இராதை நடனம், அரங்காலயா கலைக்குழுவின் பிரதீப், துஜான் ஆகியோர் வழங்கும் "முரண்கள்" நாடக ஆற்றுகை என்பனவற்றோடு மாயன் எழுதிய "அவனும் அதுவும்" சிறுகதைத் தொகுதி வெளியீடும் இடம்பெறவுள்ளது. இந்நூலின் விமர்சனக் குறிப்பை திரு.அ. சத்தியானந்தன் (அமைப்பாளர் வவுனியா அரங்காலயா) அவர்கள் நிகழ்த்த உள்ளதோடு நிகழ்வினையும் ஏற்புரையும் ஸ்ரீ ஞானேஸ்வரன் அவர்கள் வழங்கி வைப்பார்.

aat SRI LANKA

**2013 ஜனவரி பரீட்சைகளுக்கான மாணவர், பதிவுகள் தற்போது ஆரம்பம்**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியெய்திய மற்றும் தற்பொழுது க.பொ.த (உ/த) கற்றுக் கொண்டிருக்கும் எந்தவொரு மாணவரும் பதிவுசெய்து கொள்ள முடியும்.

**AAT பரீட்சைகள்**

- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பரீட்சைகள் நடைபெறும்.
- ஒவ்வொரு பாடமாகவும் பரீட்சைகளுக்குத் தோற்றலாம்
- மூன்று மட்டங்களைக் கொண்டது. ஆரம்பநிலை (Foundation) மற்றும் இடைநிலை (intermediate) பாடங்கள் எல்லாவற்றிற்கும் ஒரே தடைவையில் விண்ணப்பித்து தோற்ற முடியும்
- பரீட்சை நிலையங்கள் கொழும்பு, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், கம்பஹா, அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் அமையும்.

**AAT இறுதிமட்ட பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பெறக்கூடிய விலக்களிப்புக்கள்**

- இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் (LCASL) CAB-I பரீட்சையிலிருந்து பூரண விலக்களிப்பு.
- CIMA(UK) மற்றும் ICMA(SL) நிறுவகங்களின் ஆரம்பநிலைப் பரீட்சையிலிருந்து பூரண விலக்களிப்பு.
- இலங்கை மற்றும் சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் வர்த்தகம், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், சட்டம் மற்றும் கணினித்துறைகளில் பட்டங்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள்.

**விண்ணப்பிக்கும் முறை**

பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய மாணவர் வழிகாட்டியினை திங்கள் முதல் சனி வரை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையான காலப்பகுதியில் வேல் வர்த்தகக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளுங்கள்




aat SRI LANKA **VEAL BUSINESS COLLEGE**
VISIT US : 159 A, Sea View Road, Trincomalee. CALL US : 026 222 7622 / 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

**வணக்கம் !**

## உண்மைகளை ஒழித்து வைத்தல்!!!

அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்த, ஆனால் அவரது சாவு வரை எமக்குத் தெரியாத வரலாற்றுச் சேவையை ஆற்றிய, அண்ணல் திரு. தம்பிராசா அவர்களின் ஆவணங்களைப் பார்ப்பதற்கும் அவற்றை வாசிப்பதற்கும் எனக்கோர் அரிய வாய்ப்புக் கிடைத்தது.

அவ்வாசிப்புக்களில் எனக்கு அதிர்ச்சி தந்த விடயம் யாதெனில் அவரால் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட பளையமோட்டைக் கல்வெட்டு பல தகவல்களைக் கொண்டிருந்ததுடன் பல பேராசிரியர்களின் ஆய்வுக்கும் பேருதவி புரிந்திருந்தது.

தொல்பொருட்துறையால் பொறுப் பேற்கப்பட்ட அக்கல்வெட்டு அனுராதபுரம் தொல்பொருட்சாலைக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. ஆனால் காலப்போக்கில் ஒரு நாள் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் அக் கல்வெட்டைப் படியெடுப்பதற்காக அனுராதபுரம் நூதனசாலைக்குச் சென்றிருந்த போது ........அக் கல்வெட்டு காணாமற் போயிருந்தது. இதுவொன்றும் ஆச்சரியமல்ல. இலங்கையின் வரலாற்றுப் புத்தகங்களில் தோற்கடிக்கப்பட்ட எல்லாள மன்னனைத்தவிர எந்த தமிழ் மன்னனுமே இல்லாமற் போயுள்ள தேசத்தில் கல்வெட்டுக் காணாமற் போனதையிட்டு கவலைகொள்பவர் யார்...? இங்கு நாம் கற்றுக் கொண்ட பாடம் என்ன? அண்ணல் திரு.நா. தம்பிராசா அவர்களால் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டு முறையாக வெளிப்படுத்தப்பட்டுப் பதியப் பட்டிருந்தால் அச் சொத்து எம்மைவிட்டுப் போயிருக்காது என்பதே! எனினும் அக்காலத்தில் வெளிப் படுத்தவும் பதியப்படவும் சாதனங்களும் வாய்ப்புக்களும் எவ்வளவு இருந்தன என்பது கேள்விக் குறியே!

ஆனால் தற்காலத்தில் அவ்வாறில்லையே... ஆயிரக்கணக்கில் வெளிப்படுத்தவும் பதியப்படவும் வாய்ப்புக்கள் கொட்டிக் கிடக்கும் போது **நொண்டிச் சாட்டுக்களால் உலகப் பிரபல்யம் பெற்ற கோவிலொன்றில் மேற் கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகளின் போது தோண்டப்பட்ட குழியிலிருந்து வெளிக் கொணரப்பட்ட சோழர் கால நந்திச் சிலை மறைக்கப்பட்டிருப்பது எந்த விதத்திலும் நேர்மை யற்றதொன்றே...**

உண்மைகளை ஒழித்துவைத்தல் எவருக்கும் நல்லதல்ல. அதிலும் பொதுச் சொத்தாகிய இறைவனின் சந்நிதியில் வெளியான தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு இருக்கும் போது அதைத் தடுப்பதற்கான உரிமைகள் எவருக்குமில்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு நந்தி வெளிப்பட்டிருக்குமெனில் வரலாற்றுத் தவறொன்றினை அதை மறைத்தவர்கள் செய்யத் தொடங்கிவிட்டனர் என்பதே உண்மை!

-ஆசிரியர்-

## முஸ்லிம்களுக்கு எதிரான ...

தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் பொதுபலசேன பிரதிநிதிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் செவ்வாய்க்கிழமை (2013.02.12) நடைபெற்ற சந்திப்பின் போதே பொதுபலசேன அமைப்பின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக பொதுபலசேன அமைப்பினர் மேற்கொண்டுவரும் பிரசாரங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, முஸ்லிம்கள் தொடர்பில் பொதுபலசேன அமைப்பு முன்வைத்துவரும் பல குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கப்பட்டது. எனினும் அவர்களின் நிலைப்பாட்டில் உறுதியாகவே உள்ளனர் என முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம்.அமீன் தெரிவித்தார்.

அத்துடன் பாரம்பரிய முஸ்லிம்களுக்கு எதிராக நாங்கள் ஒருபோதும் செயற்படவில்லை. அத்துடன் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாத செயற்பாடுகளை ஒருபோதும் நாங்கள் மேற்கொள்ளவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர் என மாகாண சபை உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இவ்வாறான கலந்துரையாடலை தொடர்சியாக மேற்கொள்ளவும் இதன் ஊடாக பல பிரச்சினைகளுக்கு சுமுகமாக தீர்வு காண முடியும் என்றும் இந்த சந்திப்பின் போது இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கலந்துரையாடலில் அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹரீம், ஹலீம், மாகாண சபை உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், பைரூஸ் ஹாஜி, கொழும்பு மேயர் முஸம்மில், பொதுபலசேன அமைப்பின் தலைவர் கிரம விமல ஜோதி தேரர், செயலாளர் அத்தே ஞான சார தேரர், அமைப்பாளர் டாக்டர் விதானகே, முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம்.அமீன், செயலாளர் அஸ்கர் கான், மௌலவி ஏ.எல்.எம்.இப்ராஹிம் மற்றும் மௌலவி மாஹிர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## போதைப் பொருளுக்கு மாற்றீடாகப் பயன்படுத்தப்படும் மாத்திரைகளை வைத்திருந்தவர் கைது

போதைப் பொருளுக்கு மாற்றீடாகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு இலட்சம் வரையான மாத்திரைகளை வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவரை பொலிஸார் இன்று செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளதுடன், அம்மாத்திரைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட இம்மாத்திரைகள் பிலியன்தலை பிரதேசத்திலிருந்து நீர்கொழும்புக்கு மோட்டார் சைக்கிளில் கொண்டுவரப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த அல்விஸின் உத்தரவின் பேரில், பொலிஸ் பரிசோதகர் அரவிந்த தலைமையிலான குழுவினரே இம் மாத்திரைகளுடன் சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளனர்



## "சூரைமீனும்" வீரவன்சவும் ...

ஜப்பானிய சிறுவர்கள் அதிகளவாக சூரை மீனை உட்கொள்வதால் அவர்கள் விவேகமுடையவர்களாக உள்ளனர் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

"யுத்தத்தால் அழிவடைந்த பின்னர் ஜப்பானியர்கள் எவ்வாறு எழுச்சி பெற்றனர்? வியக்கத்தக்க தொழில்நுட்ப உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு எவ்வாறு அவர்களது மூளைகள் விருத்தியடைந்தன? என்ற கேள்விகளின் விடையாக சூரை மீனை அவர் காரணமாகக் கூறியுள்ளார். அவர்கள் தங்களது கல்வி முறையிலும் உட்கொள்ளும் முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தினர். அவர்கள் சூரை மீனைப் பிடித்து அதனை உட்கொண்டனர். சூரை மீனைப் போன்று புத்திக்கூர்மைக்கு உதவும் வகையில் வேறு எந்த மீனும் இல்லை. ஜப்பானிய சிறுவர்கள் அதிகளவான சூரை மீனை உட்கொள்வதினாலேயே விவேகமுடையவர்களாக உள்ளனர்" என அவர் கூறினார்.

## திருமலை எல்லை நிர்ணயக்குழுவில்...

திருகோணமலை மாவட்டத்தின் எல்லை நிர்ணயக்குழுவில் தமிழர் ஒருவர் கூட உள்வாங்கப்படாமை கிழக்கு மாகாண சபையின் பக்கச்சார்பான முறைகேடான செயற்பாடாகும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்தார். திருமலையில் கூடிய முதலாவது எல்லை நிர்ணயக்குழு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர் "தமிழ் சிங்கள முஸ்லிம் என மூவின மக்களும் வாழும் மாவட்டம் திருகோணமலை மாவட்டமாகும். எல்லை நிர்ணயக் குழுவில் தமி[illegible] நியமிக்க வே[illegible] இல்லை.

ஆனால் நிமிக்கப்பட்ட 6 பேரில், மாவட்ட அரசாங்க அதிபர், தேர்தல் ஆணையாளர், நில அளவைகள் அதிகாரி, மத்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட மாகாண அமைச்சர் ஆகியோர் சிங்களவர்களாகவும், புள்ளிவிபரத் திணைக்களம், மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து நியமிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்களாக இருக்கின்றனர். உள்ளூராட்சி திணைக்களத்தின் சுற்று நிருபத்தின் படி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும்.

திருகோணமலையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் [illegible]ன்றார்.

இ[illegible] நிலையில் இது தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே ஒரு பக்கச் சார்பான செயற்பாடாக அமையாத வண்ணம் தமிழர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இன ரீதியான வேறுபாடு காட்டப்படுவதை தவிர்க்க ஆவன செய்யப்பட வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

## பிடிபட்டது பெரிய குருட்டு வண்ணாத்தி

07.02.2013 அன்று கிண்ணியா வேப்பந்தவணைப் பகுதியில் 13செமீ உயரமும் 18செமீ அகலமும் கொண்ட வெள்ளை நிற வண்ணத்துப் பூச்சி ஒன்று தென்பட்டுள்ளது.

கிண்ணியா வேப்பந்தவணை தி/ஸாஹிரா வித்தியாலய மாணவர்கள் டெங்கு ஒழிப்பு சிரமதான பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் இவ்வண்ணாத்துப் பூச்சியை அவதானித்துள்ளனர். இது "குருட்டு வண்ணாத்தி" வகையை சேர்ந்தது என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.



## நான்கு வான் கதவுகள் திறப்பு

திருக்கோணமலையில் கடந்த சில நாட்களாக பெய்த மழையில் கந்தளாய்க்குள நீர்மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக செவ்வாய் கிழமையன்று குளத்தின் நான்கு வான் கதவுகள் திறந்து விடப்பட்டன.

இதனால் மூதூர் கிழக்கு மற்றும் வெருகல் போன்ற பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கிண்ணியாவில் பசுமைப் புரட்சி

நகரத்தை பசுமைப் புரட்சியின் கீழ் அழகுபடுத்துவோம் எனும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக மரக்கன்றுகளை கிண்ணியாவின் நகரபிதா எம்.எம். ஹில்மி மக்களுக்கு வழங்கி வைத்துள்ளார்.

முதற்கட்டமாக கிண்ணியா புஹாரியடி சந்தியை அழகுபடுத்தும் வேலைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் கிண்ணியா பிரதேச வீதியோரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் இப்பசுமை செயற்திட்டம் முன்னெடுக்கப்படவிருக்கின்றது.

## பயிர்களுக்கான பயிற்சி முகாம்

கடந்த வெள்ளிக்கிழமை (08.02.2013) முள்ளிப் பொத்தானையில் பயிர்ச்செய்கை முகாமொன்று இடம்பெற்றது.

விவசாயிகள் பயிர்ச்செய்கையின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாகவும், புதிய தொழில்நுட்பத்தை உள்ளீர்ப்பு செய்யும் முகமாகவும் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் தொடர்பாக பிரதேச விவசாயிகளுக்கு இந்நிகழ்வில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இதில் திருகோணமலை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம். குகதாசன், விவசாய உத்தியோகத்தர்கள், போதனாசிரியர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளையும்... மாத்தளனும்...

## "மனிதப் புதைகுழிகள் பேசுகின்றன"



**மரணம்** மலிந்த உலகு என்பது என்னவோ உண்மைதான். ஏனெனில் மரணம் சாஸ்வதம் என்பதால் பிறப்புக்கள் இறக்கவே வேண்டும். பின்னர் அவர்கள் மண்ணில் புதைக்கப்படவே வேண்டும். எனில் சம்பிரதாயங்களின் பின் அவ் உடல்கள் புதைக்கப் படும் இடங்களை நாம் புதைகுழிகள் என்கின்றோமா? இல்லை அவை இடுகாடுகளே.

அவ்வாறாயின் மனிதப் புதைகுழி என்றால் என்ன? கொலைகளின் பின் அலங்கோலமாகப் புதைக்கப்படும் மக்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்படும் போதுதான் அவை மனிதப் புதைகுழிகளாகின்றன.

அவ்வாறு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியொன்று மாத்தளை வைத்தியசாலையில் வெளிந்தது. உயிரிய வாயு மருத்துவ நிலையமொன்றை அமைக்கும் பணியில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 24ம் திகதி குழி தோண்டும் பணியில் ஈடுபட்ட தொழிலாளரால் முதலாவது மனித எச்சம் கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து இலங்கை முழுவதும் ஓர் அதிர்வலையினை ஏற்படுத்தியது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் தற்போது வரை இருநூற்றுக்கும் மேற்பட்ட உடலெச்சங்கள் வெளிவந்துள்ளன. அது மனிதப்புதைகுழிதான் என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவை பேசத் தொடங்கின...

### *"மாத்தளையின் மனிதப்புதைகுழி பேசத் தொடங்கியது"*

மனிதப் புதைகுழி வெளிவந்தவுடன் முதலில் வெளியான செய்தி (அது சில அரச ஊடகங்களில் வெளியானது) 1947ம் ஆண்டில் சின்னம்மை மற்றும் ஆட்கொல்லி நோய்களால் இறந்த பெருமளவு மக்களின் மயானம் அது என்பதே. ஆனால் மயானம் என்றால் உடலங்கள் ஒழுங்காகப் புதைக்கப்பட்டிருக்கும் இடம். ஆனால் மாத்தளை மயானமாய் இல்லை அது மனிதப் புதைகுழியாகவே இருந்தது. அலங்கோலமாய் எறியப்படும் மந்தைக் கூட்டத்தைப் புதைத்த இடமாகவே மாத்தளை புதைகுழி காணப்பட்டது.

அடுத்து அப்புதைகுழி பற்றிய பேச்சானது 1848ம் ஆண்டில் மாத்தளை விடுதலைப் போரில் கொல்லப்பட்டவர்கள் என்பதாய் இருந்தது. எனினும் அக்காலப் பகுதியில் இவ்வளவு தொகை மனிதர்கள் கொல்லப்படவில்லை என்பதுடன் அவ்வாறு கொல்லப்பட்டிருப்பினும் அக்கால வழக்கில் போரில் கொல்லப்பட்டவர்கள் முறையாகவே புதைக்கப்பட்டிருப்பர் என்பதால் அவ்வாதமும் வலுவிழந்தது. அத்துடன் 100 வருடங்களுக்கு மேற்பட்டவையான மனித எச்சங்கள் எனில் அவற்றிற்குத் தொல்பொருள் பெறுமதி உண்டா என ஆராய வந்த தொல்பொருட்துறையினர் அவை நூறு வருடங்களுக்கு மேற்பட்டவை அல்ல என சான்றிதழிட்டனர்.

அடுத்து அப்புதைகுழிச் சரிதத்தில் இயற்கை அனர்த்தம் பற்றிப் பேசப்பட்டது. 1946ல் ஏற்பட்ட மண்சரிவில் கொல்லப்பட்ட சுமார் 500 மக்களின் தடயங்கள் இவை என. எனினும் இக்கூற்றை எவராலும் நிரூபிக்க முடியவில்லை.

அடுத்து 1971ன் மக்கள் விடுதலை முன்னணியின் போரின் போது கொல்லப்பட்டவர்கள் இவர்கள் எனும் பேச்சு எழுந்தது. உடனடியாகவே ஜே.வி.பி யின் அக்கால உறுப்பினர் ஒருவர் அக்கூற்றை மறுத்தார். "நாங்கள் அரச படையுடன் நேருக்கு நேர் மோதினோம். அப்போது இத்தனை அங்கத்தவர்கள் இங்கு கொல்லப் படவில்லை" என அவர் தெரிவித்தார்.

அடுத்து தமிழர்களுக்கெதிரான 1983ன் வன்முறைக் கொலைகளா? இவை என விவாதிக்கப்பட்டது. ஆனால் 1983ல் மாத்தளையில் தமிழர்கள் இந்த அளவு எண்ணிக்கையில் உயிர்ப்பலி கொள்ளப்படடவில்லை என உறுதியாக தெரியவந்தது.

இறுதியாக தாம் யார் என அம்மனிதப் புதைகுழி எம் முன் வைத்திருக்கும் முகவரி 1988 - 1989ல் ஜே.வி.பி யினரின் உள்நாட்டுப் போரில் தடுத்து வைக்கப்பட்டு கொல்லப்பட்டவர்கள் என்பதாக உள்ளது.

"எடுக்கப்பட்ட உடலங்களின் சில தலைகள் வெட்டப்பட்டுள்ளன. எழும்புகள் சாதாரண உக்கிப்போகும் நடைமுறையிலன்றி பலமான சக்தியால் உடைக்கப்பட்டுள்ளன. அக்காலப்பகுதியில் இராணுவத்தினரே இவ் வைத்திசாலை வளவில் முகாமிட்டிருந்தனர்... அங்கு புதைந்து கிடப்பவர்கள் எம்மவர்களே" என ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசானாயக்கா கூறியுள்ளார்.

பேராசிரியர் இராஜ் சோமதேவாவின் கருத்துப்படி புதைபொருள் ஆய்வுடன் இவ் எச்சங்கள் மீது ஒரு வரலாற்று ஆராய்வை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. இக்கொலைகள் எவ்வாறு நிகழ்ந்தன? இவை அவசரமாகவா பாரம்பரிய முறைப்படியா புதைக்கப்பட்டன எனபதுடன் 3000ம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பிணங்களைப் புதைப்பது தொடர்பாக எம்மிடையே எழுந்த திசை தொடர்பான பழக்க வழக்கங்களையும் கருத்திற் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். இத்துடன் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்காக எழும்புத் துண்டங்கள் அமெரிக்காவிற்கு





அனுப்பப்பட்டுள்ளன. அதன் முடிவுகள் பிணங்கள் புதைக்கப்பட்ட ஆண்டைத் தெளிவாகச் சொல்லிவிடும் என தெரிவித்துள்ளார்.

ஆசிய மனிதவுரிமைச் சபை தனது அறிக்கையில் உடலங்களில் காயங்கள் இருப்பதை உறுதிசெய்து இது ஒரு மனிதப் புதைகுழி என்பதை தெளிவாக்கியுள்ளது. அத்துடன் இம்மனிதப் புதைகுழி தொடர்பாக மேலதிக விபரங்களான அவர்கள் எங்கே கைது செய்யப்பட்டார்கள்? அக்காயங்களின் போக்கு எவ்வாறுள்ளது? அவை ஏன் இவ்வாறு ஏற்படுத்தப்பட்டுள்ளன? என்பதை அரசே ஆராய்ந்து வெளியிட வேண்டும் என்றும் அரசின் மீது பொறுப்புளித்துள்ளது.

### *மாத்தளையும்... மாத்தளனும்...*

இவ்வாறான பாரிய மனிதப் புதைகுழிகள் இறுதியுத்தம் நிகழ்ந்துள்ள மாத்தளனின் பிரதேசத்திலும் இருக்கலாம். அப் புதைகுழிகள் என்று பேசத் தொடங்குகின்றனவோ அன்று மாத்தளை மனிதப் புதைகுழி போல சுமார் நூறாண்டு கால வரலாற்றைப் புரட்டிப் போடப்போவதில்லை. அவை 2009ம் ஆண்டையே சுட்டி நிற்கப் போகின்றன. அப்புதைகுழிகள் தாம் கொல்லப்பட்ட விதங்களை உலகிற்கு கூறிவிடும். அங்கு "பொய்" எனும் வார்த்தை இருக்காது. ஏனெனில் புதைகுழிகளுக்குப் பொய் பேசத்தெரியாது.

மாத்தளைப் புதைகுழி வெளித்தெரிந்தவுடன் மனதை உலுக்கிய விடயம் மாத்தளன் பகுதியிலிருந்து காயத்துடன் மீட்கப்பட்ட மக்கள் திருமலைப் பொது வைத்தியசாலைக்கு கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மாத்தளை வைத்தியசாலைக்கும் அனுப்பப்பட்டிருந்தனர். எனினும் ஆய்வுகள் அங்கு அனுப்பப்பட்ட மக்கள் சிகிச்சையின் பின் வீடு திரும்பியிருந்ததை உறுதிப்படுத்தியுள்ளன.

அடுத்து ஆசிய மனித வுரிமைச்சபையின் வேண்டுகோளுக்கு அமைய அரசு மாத்தளைப் புதைகுழி தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமா? அவ் விசாரணைகள் பல ஆண்டுகளுக்கு இழுத்தடிக்கபபடவேயுள்ளன. ஏனெனில் மாத்தளைப் புதைகுழிக் காலம் 1988 - 1989 என உறுதிப்படுத்தப்பட்டால் அக்காலத்தில் ஆட்சியில் இருந்த அரசு ஐக்கிய தேசியக் கட்சி ஆகும். தற்போதைய அரசு கடுமையான விசாரணைகளை மாத்தளைப் புதைகுழி தொடர்பாக மேற்கொண்டு சட்டத்தின் முன் நிறுத்தினால் அவர்கள் தற்போது தண்டனையை அனுபவிப்பார்கள் ஆனால் இந்த ஆட்சி மாறி ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிபீடமேறினால் மாத்தளன் புதைகுழிகள் அல்லவா மேல் வந்துவிடும்....?

எனவே மாத்தளைப் புதைகுழிகள் மீளவும் புதைக்கப்படவே வாய்ப்புக்கள் அதிகமாய் இருக்கின்றன. ஏனெனில் மாத்தளன் புதைகுழிகள் இன்னும் பேசத்தொடங்கவில்லையே!.

- ***மாயன்*** -

---

# வரலாற்றைப் பேசுதல்

**வி. மைக்கல் கொலின்.**

*கடந்த வார தொடர்ச்சி...*

அக்கட்டுரை கூறமுற்படும் இன்னொரு விடயம் பொதுமைப்படுத்தப்பட்ட ஒரு அமைப்பின் தேவை, சென்ற வருடம் திருகோணமலையில் நடைபெற்ற கவிஞர் தாமரைத்தீவான் கௌரவிப்பு நிகழ்விலும், மகுடம் சிறப்புமலர் வெளியீட்டு நிகழ்விலும் கலந்து கொண்டிருந்த வேளை குறித்த கூட்டத்தில் திருகோணமலையின் பொது அமைப்பாக திருமலை 'தமிழ்ச்சங்கம் ஒன்றினை ஆரம்பிப்பது தொடர்பாக பேசுவதற்கு இருந்தேன். இது தொடர்பாக எழுத்தாளரும் கவிஞருமான கேணிப்பித்தன் ச. அருளானந்தம் அவர்களுடன் உரையாடிய வேளை' தம்பி தமிழ்ச்சங்கம் உருவாக்கம் பற்றி இப்போது கூட்டத்தில் பேச வேண்டாம். நான் அது தொடர்பான முயற்சியில் இறங்கியுள்ளேன். அது கைகூடும் போது அனைவருக்கும் அழைப்பு அனுப்பி விரைவில் ஆரம்பிக்கலாம் என்றார். நானும் அக்கூட்டத்தில் தமிழ்ச்சங்கத்தின் தேவைப்பற்றி அக்கூட்டத்தில் பேசவில்லை.

இன்று கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஏன் அண்மையில் மலையகத்தில் ஹட்டன் நகரில் கூட தமிழ்ச்சங்கம் உருவாகியுள்ளது. ஆனால் திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற திருத்தலமாம் திருகோணமலையில் இன்னும் ''தமிழ்ச் சங்கம்'' உருவாக்கப்படவில்லை. பொது அமைப்பின் தேவை பற்றி கூறும்

> "இக்கட்டுரை திரு. தி. பவித்ரனின் "126வது ஆண்டில் கைகூடுமா கலை இலக்கியவாதிகளின் ஒற்றுமை" எனும் தலைப்பில் 30.01.2013ம் திகதி வெளியான கட்டுரையின் எதிர் வினையாகும்"

பவித்ரன் போன்ற இளைஞர்கள் முனைப்புடன் இம்முயற்சியில் இறங்கினால் துணை நிற்பதற்கு நான் தயாராகவே உள்ளேன்.

மேலும் இக்கட்டுரையில் அண்மையில் திருமலையில் நடைபெற்ற கிழக்கு மாகாண இலக்கிய விழா பற்றி எழுதும் பவித்ரன் மட்டக்களப்பு, அம்பாறை இடங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அங்கு வளவாளர்களாக இடம் பெற்றிருந்தார்கள் எனக் குறிப்பிடுகின்றார். இக்கட்டுரையின் ஓரிடத்தில் மூத்த எழுத்தாளர்கள் பிரதேசவாதம் பேசுவது பற்றி குறிப்பிடும் இவர் தனது கருத்துடனேயே முரண்பட்டு நிற்கின்றார்.

கிழக்கு மாகாண இலக்கிய விழா என்று வருகையில் மட்டக்களப்பும், அம்பாறையும், கிழக்கு மாகாண மாவட்டங்களே என்பது இவருக்கு தெரியாமல் போனதும் இக்கருத்தரங்கில் இவர்களை விட யாழ்ப்பாணம், கொழும்பில் இருந்தே அதிகளவு வளவாளர்கள் கலந்து கொண்டது பற்றி புரியாமல் போனதும் தான் வேதனை. கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் கிழக்கு மாகாண இலக்கியவாதிகளுக்கு முக்கிய இடம் வழங்காமல் போனது கலாச்சார உத்தியோகத்தருக்கும்,



கலாச்சார உதவிப் பணிப்பாளருக்குமே வெளிச்சம்.

இறுதியாக, திருகோணமலையின் கலை இலக்கிய பாரம்பரியம் மிக நீண்டது. அது நீண்ட வரலாற்றைக் கொண்டது. அது காலத்துக்கு காலம் ஒரு சிலரை அடையாளம் காட்டிச் செல்லும். மண்ணை விட்டு விலகியிருந்தாலும் திருமலை மண்ணை நேசிப்பவர்கள் இருக்கும் வரை அதன் கலை இலக்கிய பாரம்பரியமும், கலை இலக்கிய செயற்பாடுகளும் நடந்து கொண்டேதான் இருக்கும். அதனை யாரும் தாங்கிப் பிடிக்கத் தேவையில்லை.

மூத்த இலக்கிய வாதிகளுக்கிடையே ஒற்றுமையில்லை, பொதுமைப்படுத்தப்பட்ட இலக்கிய நிறுவனம் இல்லை என்ற குறைகூறல்களை விடுத்து நாம் என்ன செய்யலாம் என சிந்தித்து செயற்பட்டால் அமைப்பு தானாகவே உருவாகும்.

***'ஏனெனில் வரலாற்றை தீர்மானிப்பவர்கள் தனி மனிதர்களே அன்றி அமைப்புக்கள் அல்ல. இதுவே வரலாற்று உண்மை."***

- அன்புடன்.

**வி. மைக்கல் கொலின்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரங்கநாயகியின் காதலன்

*சென்ற வார இதழில்...*

அவனது போதாத காலம், அவனது குதிரை அந்த நேரம் பார்த்துத்தானா கனைக்க வேண்டும்? இனி...

**தி**டீரென்று பாடலை நிறுத்தியவள், வலக்கையை ஊன்றியவாறே திரும்பி ஒலிவந்த திசைநோக்கிப் பார்த்தாள். அவள் கண்கள் படபடவென அடித்துக்கொண்டன. முகத்தில் பூரணமாக வியப்பின் சாயல். அவள் கேட்டதோ குதிரையின் கனைப்பு, அருகில் காண்பதோ ஒரு கம்பீரமான காளை! அவள் பார்வை அவனினின்றும் விடுபட்டு குதிரைக்காகத் தேடியது. அவன் புரிந்து கொண்டான்.

மன்னிக்கவேண்டும். தங்கள் பாடலை இடையூறு செய்து குழப்பியது என் குதிரைதான். இதோ... என்றவன், சற்று நகர்ந்து பின்னால் புதரண்டை ஒன்றுமே அறியாததுபோல நின்று கொண்டிருந்த குதிரையைக் காட்டியபோது, அது தன் முன்காலொன்றால் நிலத்தைத் தட்டி தலையை மேலும் கீழும் ஒருமுறை ஆட்டியது.

குதிரையைக் கண்டுவிட்ட திருப்தியில் தன் பார்வையை அவனுக்காகத் திருப்பினாள். வசீகரமான முகம், ராஜகளை சொட்டும் தோற்றம், விசமம் சொரியும் கண்கள், குறும்புப் பார்வை. அரும்பி மேலுதட்டின் மேலாக கோடிழுத்தது போல வளரும் மீசை - அகன்ற மார்பு, உரமேறிய தோள் தசைகள், அவன் மார்பின் குறுக்காக இருந்த கரங்களின் புடைப்பு அவனது பலத்தை எடுத்துக் காட்டின. நீண்ட கால்கள் மணல்பரப்பில் உறுதியாக நின்ற விதம் - எவ்வளவு நேரம் பார்த்தாலும் சலிக்காத ஆண்மையின் உருவாக அவன் இருந்தான். அவனை அணுஅணுவாக இரசிக்கும் தன் செயலை அவளால் தடுக்க முடியவில்லை.

மீண்டும் அவன் கண்களுக்காக, பார்வையைக் கொண்டு சென்ற-போதுதான், அவனது விசமம் நிறைந்த பார்வை தன்னை அவதானிப்பதையும், தன்னை அங்கம் அங்கமாக அலசுவதையும் கண்டு நாணிப்போய், சரேலென எழுந்து நின்றுகொண்டு, வலது கால் பெருவிரலால் மணலில் கிளறிக் கொண்டிருந்தாள். அவளுக்குள் ஒரு அச்சம் எழவே செய்தது. தனித்த இந்த சூழலில்.. அவள் தலை கவிழ்ந்து நின்றது அவனுக்கு வசதியாகப் போய்விட்டது.

இது பெண்ணா இல்லை தங்கச் சிலையா என்ற அவனது ஆராய்ச்சி தடையின்றித் தொடர்ந்தது. சங்குக் கழுத்திற்குக் கீழே அடங்காமல் திமிறிக் கொண்டிருந்த அவளது அழகு யாரையும் மயக்கிப்போடும் போல இருந்தது. அவளது கைகளின் மினுக்கம் மேனியெல்லாம் பரவிக் கிடந்தது. கடைந்தெடுத்த சிற்பம் போல அவள்... நான் சவாரி கிளம்பிய வேளை நல்ல முகூர்த்தம் போலிருக்கிறது, என்று தனக்குள் மெச்சிக் கொண்டான். தனிமையிலிருக்கும் பெண்ணை இப்படி ரசிப்பது பண்பாகாது என்று

தனக்குத்தானே கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தபோதுதான், அவள் பாடல் நின்றுவிட்ட வெறுமையை அவனால் உணரக்கூடியதாக இருந்தது.

அவள் வாயினின்று புறப்பட்டுக் கொண்டிருந்த இனிய ராக ஆலாபனை திடீரென்று நின்று போனது, மகுடியின் ஓசையால் மயங்கி ஆடிக்கொண்டிருந்த நாகசர்ப்பம் திடீரென குழலோசை நின்றால் எப்படித்தவிக்குமோ, அப்படியொரு தவிப்பில் தன் உள்ளம் இருப்பதை உணர்ந்தான். இதற்கெல்லாம் இந்தப் புரவிதான் காரணம் என்று மனதிற்குள் திட்டிக் கொண்டவன்,

**தம்பலகாமம் த. வேலாயுதம்**

# தம்பன் கோட்டை

**பாகம் - 3**

## வரலாற்று நாவல்

மன்னிக்கவும் உங்கள் பாட்டைக் குழப்பி விட்டமையைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். பாட்டைத் தொடருங்கள்... நிறுத்தி விட்டீர்களே பாடுங்கள்... எல்லாம் இந்தப் புரவியால் வந்தவினை அவன் அவளது பதற்றத்தை நீக்கமுயல்வது அவளுக்குத் தெரிந்தது.

அவன் காணாதபடி புன்னகைத்துக் கொண்டாள். பாடவே மாட்டீர்களா?... சரி நான் நின்றால் பாட மாட்டீர்கள் போலிருக்கிறது. உங்களைக் குழப்பிவிட்டேன் போலிருக்கிறது

அவன் குரலில் இருந்த ஏக்கம் அவளைத் தொட்டது. இல்லை என்று சொல்வது போல் தலையை வெட்டித் தூக்கினாள். மறுகணம் அவனது பார்வையை சந்திக்க வெட்கித் தலை குனிந்து கொண்டாள். அவளது மனவோட்டம் -அவனுக்குப் புரிந்தது. திருப்தியாகவும் இருந்தது. அவளைச் சீண்டுமாப்போல, சரி.. பார்க்கலாமே. நான் போன பிறகு பாடுங்கள். என்றபடி அஸ்வத்தை நோக்கிச் சென்று கடிவாளத்தை கையிலெடுத்துக் கொண்டு, பாய்ந்தேறினான். அவன் நகரத்தொடங்கியது அவளது உணர்வுக்குத் தெரிந்தது தலை நிமிர்ந்தாள்.

இன்றில்லாவிட்டாலும் மீண்டும் உங்கள் இனிய கானத்தை கேட்கவே செய்வேன், வரட்டுமா? என்று அவளைப் பார்த்து கூறி புன்னகைத்துவிட்டு அஸ்வத்தை மேற்குத் திசையால் செலுத்திச் சென்றான். அதுவும் அவன் உள்ளத்தின் துள்ளலுக்கு ஈடுகொடுத்துப் போய்க் கொண்டிருந்தது.

அவன் தன்பார்வையினின்றும், பாதையினின்றும் மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றவள், வீட்டுக்குப் போக முனைந்தாள். அவன் பார்வைக்கு மறைந்தாலும், அவன் நினைவில் அகலமாட்டான் போலிருந்தது. அவனது எண்ணம் மனதுக்குள் எழுந்து அலையாடியது. யார் அந்த கம்பீரமான வாலிபன்...? ஊருக்குப் புதியவனாக தென்படுகின்றானே! யாராக இருக்கலாம். குதிரையில் போகும் மிடுக்கையும் ஆளின் தோற்றத்தையும் பார்த்தால், இவன் தம்பன் கோட்டை வீரர்களின் ஒருவனாக இருக்கலாம் என்று தெரிகிறது.. யாரும் புதிதாக வந்திருக்கலாம்.. என்று ஒரு முற்றுப்புள்ளி வைக்க முற்பட்டாலும், சிந்தனை அதற்கு இடம் தரவில்லை. ஆள் கவர்ச்சியானவன்தான். இளம் மங்கையர்களின் நெஞ்சங்களைக் கவர்ந்திழுக்கக் கூடிய சுந்தர புருசன் என்பதில் ஐயமேயில்லை என்று, அவனது ஆனந்த நினைவை நெஞ்சில் சுமந்து கொண்டு நடையை எட்டிப் போட்டாள். *தொடரும்...*




## சோழரின் திருமலை மீதான ஆக்கிரமிப்பும், அதன் தாக்கமும்...

*சென்ற வாரத் தொடர்ச்சி ....*

**சோழ** நாட்டின் பொருளாதாரம் தற்பொழுது உள்ளது போலவே வரி விதிப்பு மூலமே நிர்வகிக்கப்பட்டது. நில வரி மட்டுமல்லாமல், வர்த்தக வரியும் விதிக்கப்பட்டது. வர்த்தகம் செழித்தோங்கினால்தான் தங்களுக்கு வரி கிடைக்கும், என்ற எண்ணமே, தங்கள் வர்த்தகத்திற்குப் பாதிப்பு ஏற்பட்ட பொழுதெல்லாம் அவர்களை போர் செய்யத் துாண்டியது. அடிப்படையில் அவர்களது நோக்கம் பொருளாதாரம்தான். அவர்கள் இலங்கைக்கு வந்தது சைவத்தையும் தமிழையும் வளர்க்க அல்ல ,நம் முப்பாட்டன்களின் செல்வத்தையும் உழைப்பையும் சுரண்ட..!

சோழருடைய படையெடுப்பு இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான நிரந்தரப் பாதிப்புக்களை உருவாக்கியுள்ளது.

அவர்களுடைய கடலோடும் அறிவு சிறப்பானது. தென் தமிழகத் துறைமுகத்திலிருந்து இலங்கையின் திருகோணமலை அருகேயுள்ள இலங்கைத் துறைமுகத்திற்கு சுமார் 50 000 படை வீரர்களை நகர்த்தினார்கள். அதில் ஒரு பிரிவு இலங்கைத் தீவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, ஒரு பிரிவு தென்னாசியப் படையெடுப்பில் ஈடுபட்டது. இதில் இரு விடயங்கள் அவதானிக்கலாம்.

1. அரபு வணிகர்களின் ஆதிக்கத்தை தமிழகத்திலும் இலங்கையிலும் அவர்களுடைய காலத்தில் கட்டுப்படுத்தியது.
2. தமிழக சிற்றரசுகளை ஒன்றாக்கி தமிழ்த் தேசிய உணர்வை உருவாக்கியது.

ஆனாலும் இலங்கையில் சோழர்களால் அடங்கா பற்றுகளின் நிலப்பரப்பு கைப்பற்றப்பட்டாலும்.அடங்க மறுக்கும் தன்மையை கைப்பற்ற முடியவில்லை.

இலங்கையில் சோழர் தமிழர் சார்பான அயலுறவுக் கொள்கையைக் கொண்டிருக்க, சிங்கள மன்னர்கள் சோழருக்கு எதிரான அரசுகளுடன் உறவுகளை வளர்த்து இலங்கையில் தமிழ் அரசுகளை அழித்தார்கள்.( தற்கால இலங்கை இந்திய உறவுகளை ஒப்பு நோக்கவும்.). அந்தமான். லட்ச தீவுகளை கைப்பற்றி தனது ஆட்சிக்குள் வைத்திருக்க சோழருடைய படையெடுப்பு உதவியது. ஆனால் 30 கி.மீ தொலைவில் உள்ள இலங்கையை ஆட்சிக்குள் கொண்டுவர முடியாமற் போனதற்கு தமிழகத்தில் ஆட்சிகள் பிளவுபட்டிருந்ததை சிங்கள ஆட்சியாளர்கள் நன்கு பயன்-படுத்தினார்கள்.

*இலங்கையும் சோழர் ஆட்சியும்...*

பத்தாம் நூற்றாண்டின் நாலாம் காற்பகுதி தொடக்கம் சுமார் 70 ஆண்டு காலம் இலங்கையில் சோழர் ஆட்சி நிலவியது. இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தன் என்று கூறப்படுபவர், பாண்டியர், சேரர் ஆகியோருக்கு ஆதரவு கொடுத்ததாகத் தெரிகிறது. இதனால் சோழ மன்னனான முதலாம் இராஜராஜன் கி.பி 993 இல் இலங்கையின் மீது படையெடுத்து தலை நகரமான அனுராதபுரத்துடன் சேர்த்து நாட்டின் வட பகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். அனுராதபுரத்தைக் கைவிட்டுப் பொலன்னறுவை என்னும் இடத்தைத் தலைநகரம் ஆக்கினான். சோழர் ஆட்சிக்குட்பட்ட இலங்கையின் பகுதி மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயரிடப்பட்டு, தலைநகரான பொலன்னறுவையும் ஜனநாதமங்கலம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆயினும் இலங்கையின் தென் பகுதியான ருகுணு இராச்சியம் 24 வருடங்கள் ஐந்தாம் மகிந்த மன்னன் தலைமையில் சோழர் இடையூறு இன்றி ஆட்சி நடத்தி வந்தது.

கி.பி 1017 ஆம் ஆண்டில், பாண்டியன் இலங்கையில் மறைத்து வைத்திருந்த மணிமுடியையும், செங்கோலையும் கைப்பற்றுவதற்காக முதலாம் இராஜராஜன் எஞ்சியிருந்த ருகுணு இராச்சியத்தையும் படைகளை அனுப்பிக் கைப்பற்றினான். இதன் மூலம் முழு இலங்கையையும் சோழர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தான். இந்த தாக்குதலின் போது ருகுணு இராச்சியத்தின் மன்னனான ஐந்தாம் மகிந்தன், இராணிகள் மற்றும் அரச ஆபரணங்களை சோழர்படை கைப்பற்றியது. சோழரினால் கைது செய்யப்பட்ட ஐந்தாம் மகிந்தன் 1029 இல் சோழர் சிறையில் மரணமானான். ஐந்தாம் மகிந்தனின் மரணத்தைத் தொடர்ந்து ருகுணுவின் படையினர் சோழர்படைகளுக்கு எதிராகப் புரட்சி செய்ய ஆரம்பித்தனர். சோழர் ருகுணுவைத் தாக்கி ஐந்தாம் மகிந்தனைக் கைப்பற்றியபோது அவனது இளவரசனான காசியப்பன் தப்பித்து ஓடிவிட்டான். ஐந்தாம் மகிந்தனின் மறைவிற்குப் பின்னர் றுகுணுவில் இருந்து ஆரம்பித்த சிங்கள சோழ எதிர்ப்பிற்கு 12 வயது நிரம்பிய காசியப்பன் தலைமை வகித்தான்.

காசியப்பன் பற்றி அறிந்து கொண்ட இராஜேந்திர சோழன் தனது மகன் இராசாத்தி இராசன் தலைமையில் கி.பி.1041-ல் ஒரு படையை அனுப்பி காசியப்பனை எதிர்த்தான். இந்தப் போரில் காசியப்பன் உயிரிழந்ததுடன் சோழர்படை பெரும் வெற்றி ஈட்டியது. இதேவேளை சூளவம்சத்தை ஆதாரமாகக் கொண்ட வரலாற்றுத் தகவல்கள் ஆறுமாதம் தொடர்ந்த இந்த யுத்தம் இரண்டு சிங்களத் தளபதிகள் தலைமையில் இடம்பெற்றதாகவும் இந்த யுத்தம் காரணமாக சோழர்கள் படை ருகுணுவில் இருந்து வெளியேறிய-தாகவும் கூறப்படுகின்றது. இதன் பின்னர் முதலாம் விக்கிரமபாகு எனும் பெயரில் காசியப்பன் தனது அரசை ருகுணுவில் அமைத்துக்கொண்டான் எனவும் சூளவம்சம் கூறுகின்றது.

தொடர்ந்து தனது படைப்-பலத்தைப் பெருக்கியதுடன் மக்களை தனக்கு ஆதரவாகத் திருப்பும் நோக்கிலும் விக்கிரமபாகு ஈடுபட்டான். இதேவேளை சோழருக்கு எதிரான பாண்டியர், சேரருடன் நல்லுறவை வளர்த்துக்கொண்டான். இதேவேளை அவ்வப்போது ருகுணு இராச்சியத்தின் மீது சோழர்படைகள் தாக்குதல் நடத்தினாலும் ருகுணுவைக் கைப்பற்றும் நோக்கம் அவர்களுக்கு இருக்கவில்லை.

*(இன்னும் நடுவோம்)*

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**

**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**

**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் உலக வலம்

## எரிதிராவக வீச்சில் சாவைத் தழுவினார் வினோதினி..

மூன்றுமாத காலத்துக்கு முன் காதலிக்க மறுத்தார் என்பதற்காக சுரேஸ் என்ற இளைஞனால் முகத்தில் திராவகம் வீசப்பட்ட பொறியிளாளர் வினோதினி சென்னை வைத்தியசாலையில் 12.02.2013 அன்று சாவடைந்துள்ளார்.

தனது காதலை ஏற்க மறுத்தார் என்ற ஒரே காரணத்துக்காக சுரேஸ் என்பவன் வினோதியின் முகத்தில் எரி திராவகத்தை வீசியிருந்தான் இதனால் வினோதினியின் முகம் முற்றாக கருகியிருந்தது. இந்நிலையில் கடந்த வியாழன் மூச்சுத்தினரல் ஏற்பட்டு மரணமடைந்துள்ளார். வினோதினி இந்நிலையில் சுரேஸ் மீதான வழக்கு எரிதிராவக வீச்சு என்ற குற்றச்சாட்டிலிருந்து கொலை வழக்காக மாற்றப்பட்டுள்ளது.



## ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கு பாலியல் குற்றவாளிகளே தகுதியானவர்கள்..

**– நடிகை த்ரிஷா –**

ஆய்வுகூடங்களில் பரிசோதனை முயற்சிகளுக்கு பாலியல் குற்றவாளிகளை பயன்படுத்துமாறு நடிகை த்ரிஷா தனது சமூக வலைத்தளம் ஒன்றில் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆய்வுகூடங்களில் எலி, முயல் போன்ற விலங்குகளின் மீது புதிதாக கண்டுபிடிக்கப்படும் மருந்துகளை செலுத்தி பரிசோதனை பார்ப்பதை விட இவ்வாறான பாலியல் குற்றவாளிகளை இது போன்றவற்றுக்கு பயன்படுத்தலே சிறந்தது. இதுவே அவர்களுக்கு சரியான தண்டனையாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



நடிகை த்ரிஷா இந்தியாவின் பல விலங்கு பாதுகாப்பு அமைப்புக்களில் உறுப்பினராக இருந்துவரும் நிலையில் இக்கருத்தை வெளியிட்-டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பராஒலிம்பிக் வீரன் தனது காதலியைச் சுட்டுக் கொன்றார்

இருகால்களும் அற்ற பரா ஒலிம்பிக் மற்றும் ஒலிம்பிக் வீரரான ஒஸ்கார் பிஸ்டீரியஸ் தனது காதலியைச் சுட்டுக் கொன்ற குற்றத்திற்காகக் கைதாகியுள்ளார். எண்ணிக் கணக்கற்ற தடவைகள் அவர் தனது 30 வயதான மொடல் அழகியைச் தனது வீட்டில் வைத்தே சுட்டுக் கொன்றுள்ளார். ரீவா ஸ்ரீன்காம் என்னும் அம்மொடலழகி கடந்த வாரமே பத்திரிகை-யொன்றுக்குப் பேட்டியளித்த போது தனது காதலன் ''குறைவில்லாச் சுவை'' யுடையவர் எனத் தெரிவித்திருந்தது குறிப்பிடத் தக்கது.



## கைதி X ன் மரணத்தை ஏற்றுக்கொண்டது இஸ்ரேல்

இஸ்ரேலிய நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்கினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதாகி இருந்து ஆஸ்திரேலியக் குடியுரிமையைக் கொண்ட கைதி ஒருவர் கைதாகிச் சில நாட்களிலேயே தனது சிறையறையில் பிணமாக மீட்கப்பட்டதை நீண்ட மௌனத்தின் பின் இஸ்ரேலிய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

ஏவுபார்ப்பவர் என அடையாளம் காணப்பட்ட இவர் கைதி எக்ஸ் என சங்கேதப் பெயரில் இஸ்ரேலியச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். அவர் முறையே பென் ஷியர், பென் அலன் மற்றும் பென் அலோன் என்னும் மூன்று பெயர்களைக் கொண்டிருந்தார். இவரது உடலத்தைக் கைப்பற்றிய பின் ஆறு வாரங்களாக நடந்த உள்ளக விசாரணையின் பின் அவர் தனதுயிரை தானே மாய்த்துக் கொண்டதாக இஸ்ரேல் தகவலளித்துள்ளது.

## வாய்திறந்தார் முன்னாள் சிரிய வெளிவிவகாரப் பேச்சாளர்

கடந்த டிசம்பர் மாதத்தில் திடீரெனக் காணமற் போயிருந்த சிரியாவின் வெளிவிவகார அமைச்சின் பிரபல்யமான பேச்சாளர் ஜிகாத் மக்திசி தான் உயிருடன் ஒளிந்து வாழ்வதாக இலத்திரனியல் அஞ்சலிட்டுள்ளார்.

தான் அரசுடனோ அல்லது புரட்சிக்கார எதிர் கட்சியுடனோ இல்லை என்ற தெரிவித்துள்ள அவர் தனது நாட்டின் நிலைமைகள் அழிவடையும் போக்கிற்கு மாற்றமடையத் தொடங்கிய பின்னரே தான் ஒளிந்து வாழ்வதாக தெரிவித்துள்ளார்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 05

பிரதீபா

1. 'மின்னேரியாத் தெய்வம்' என அழைக்கப்பட்ட மன்னன் யார்?
   1. தாதுசேனன் 2. பராக்கிரமபாகு 3. மகாசேனன்
2. 'வீண் பழிக்குப் பயப்படாதே' என்ற கருத்தைத் தரும் பழமொழி எது?
   1. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை 2. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு 3. காகம் திட்டி மாடு சாகாது.
3. இலங்கையில் பால் உற்பத்திக்குப்பங்களிப்புச் செய்யும் நிறுவனம் எது?
   1. கால்நடை வளங்கள் அமைச்சு 2. கமநல சேவைகள் திணைக்களம் 3. விவசாயத் திணைக்களம்
4. தேசப்படத்தில் வயல்களைக் குறிக்கப் பயன்படும் நிறம் எது?
   1. மஞ்சள் 2. கபிலம் 3. பச்சை
5. மண்ணரிப்பை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக அமைய முடியாதது?
   1. மனிதனின் செயற்பாடுகள் 2. மரம் நாட்டுகை 3. ஓடும் நீர், காற்று
6. ஔடத பானம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பழத்தைக் கொண்ட தாவரம் எது? 1. வில்வம் 2. முருங்கை 3. பலா
7. பென்சிலில் உள்ள எழுதும் பொருள் எதனால் ஆக்கப்பட்டுள்ளது?
   1. ஈயம் 2. காபன் 3. காரீயம்
8. பின்வரும் பிராணிகளில் தாவர இலையை உண்பது?
   1. மயிர்க்கொட்டி 2. நத்தை 3. வண்டு
9. இலங்கை ஓர் தீவாகும். இலங்கையைச் சூழவுள்ள சமுத்திரம் எது?
   1. பசுபிக் சமுத்திரம் 2. இந்து சமுத்திரம் 3. அத்திலாண்டிக் சமுத்திரம்
10. "ஆந்தையின் பற்கள் விழுந்ததால் ஆந்தையினால் உணவு உண்ண முடியவில்லை". இக்கூற்று பிழையாவதற்கான காரணம் யாது?
    1. ஆந்தைக்கு எப்போதுமே பற்கள் விழுவதில்லை 2. ஆந்தைக்கு பற்கள் இல்லை 3. ஆந்தை உணவு உண்பதில்லை
11. கீழேயுள்ள கவிதை வரிகளை ஒழுங்குபடுத்தும் போது அமையும் சரியான வரிசையை தெரிவு செய்க.
    1. காட்சி கண்டு மகிழுவான் 2. இடியைப் போல வெடித்திடும் 3. குட்டித் தம்பி நடுங்குவான் 4. எட்டுத் திக்கும் அலறிட
    1. 4,1,3,2 2. 4,2,3,1 3. 2,4,3,4
12. தேவாங்கு : அழும் என்பது போல எருமை ..................
    1. கத்தும் 2. எக்காரமிடும் 3. எக்காளமிடும்
13. ஒரு பேரூந்தில் 30 பேர் பயணித்தனர். அதில் 19 பேர் குடையும், 16 ரெயின்கோட்டும் சிலர் குடையும் ரெயின் கோட்டும் வைத்திருந்தனர். எனின், குடை மட்டும் வைத்திருந்தோர் எத்தனை பேர்?
    1. 5 பேர் 2. 14 பேர் 3. 19 பேர்
14. குமார் கோவிலுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் செல்வான். அவன் இறுதியாக நேற்று முன்தினம் கோவிலுக்குச் சென்றான் எனின், இன்னும் எத்தனை நாட்களில் கோவிலுக்குச் செல்வான்?
    1. 5 நாட்கள் 2. 6 நாட்கள் 3. 4 நாட்கள்

**கீழ்வரும் தரவினை வாசித்து 15, 16ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

அ,ஆ,இ,ஈ - திருக்கோணமலையில் வசிப்பவர். உ,ஊ,எ,ஏ - கந்தளாயில் வசிப்பவர்கள். இ,ஈ,உ - ஆண்கள். ஆ,உ,ஊ - 18 வயதிற்கு மேற்பட்டவர்கள்.

15. பின்வருவோரில் எவர் திருக்கோணமலையில் வசிக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்? 1. அ 2. ஆ 3. ஊ
16. கந்தளாயில் வசிக்கும் 18 வயதிற்குட்பட்ட பெண்கள் யார்?
    1. எ, ஏ 2. அ, எ 3. ஊ, ஏ
17. ஓர் கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களினதும், முச்சக்கர வண்டிகளினதும் மொத்த எண்ணிக்கை 35 ஆகும். அவற்றின் சில்லுகளின் எண்ணிக்கை 87. மோட்டார் சைக்கிள்களினதும், முச்சக்கர வண்டிகளினதும் எண்ணிக்கை முறையே
    1. 15, 20 2. 17, 18 3. 18, 17
18. 50 சத மற்றும் ஒரு ரூபா நாணயங்கள் என்னிடம் சம அளவு எண்ணிக்கையில் காணப்படுகின்றன. இவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 27. என்னிடம் உள்ள மொத்த நாணயங்கள் எத்தனை?
    1. 36 2. 29 3. 34
19. ஒரு காணித் துண்டைச் சுற்றி ஒவ்வொன்றும் 8மீற்றர் இடைவெளி கொண்டதாக கொடிகள் நடப்பட்டிருந்தன. அக்காணித் துண்டின் சுற்றளவு 200 மீற்றர் எனின், அங்கு நடப்பட்ட கொடிகள் எத்தனை?
    1. 25 2. 28 3. 30
20. விரித்து வைக்கப்பட்டிருக்கும் புத்தகத்தின் கீழ் மூலையில் 1007 என பக்க இலக்கம் இடப்பட்டுள்ளது. இன்னும் 103 பக்கங்கள் திருப்பப்பட்டால் புத்தகம் முடிவடையும். எனின், புத்தகத்தின் மொத்த பக்கங்களின் எண்ணிக்கை யாது?
    1. 1173 2. 1110 3. 1137

பெயர்: ................................................................................

................................................................................

முகவரி: ................................................................................

................................................................................

................................................................................

பாடசாலை: ................................................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிசானா

## "ரிசானாவுக்கு வழங்கப்பட்ட தண்டனை இஸ்லாமிய "ரியா" சட்டப் பிரகாரமா? திட்டமிடப்பட்ட படுகொலையா?"

ரிசானா நபீக்கைப் பற்றி விசேசமாக எதுவும் சொல்லத் தேவையில்லை.

நமது இணைய வாசகர்களுக்கு நண்பர்களுக்கு அவரையும் அவருக்கு நிகழ்ந்த கொடூரமும் அதன் வேதனையும் வலிகளும் நன்கு தெரியும்.

ரிசானா நபீக்குக்கு இஸ்லாத்தின் பெயரால் வழங்கப்பட்ட தண்டனை சரியானதா? இஸ்லாமிய "ரியா" சட்டப் பிரகாரம் அவரது நிலை என்ன?

இஸ்லாமிய 'ரியா சட்டம் மக்களை மனிதர்களாகவும், மனிதர்களை புனிதர்களாகவும் உருவாக்க அல்லாஹ்வினால் அருளப்பட்டதாக முஸ்லிம் அறிஞர்கள் சொல்கிறார்கள். உண்மையும் அதுதான்.

அப்படி என்றால் மனித குலத்தை ஒரு கணம் ஸ்தம்பிக்க செய்த ரிசானா நபீக்கின் மரண தண்டனை சட்டத் தீர்ப்பு சொல்லும் இஸ்லாமிய 'ரியா செய்தி என்ன?

சவூதி அரசாங்கத்துக்கு இஸ்லாமிய "ரியா" சட்டத்தை அமுல் நடாத்தும் அருகதை அல்லது தகுதி இல்லை என்று இஸ்லாமிய "ரியா" சட்டம் சொல்கிறது.

அதெப்படி..?

இஸ்லாமிய "ரியா" சட்டம் அனுமதிக்கும் குற்றவியல் தண்டனையை அமுல் நடாத்தும் தகுதி அல்குர்ஆனை தனது அரசியல் யாப்பாக ஏற்று அதன் பிரகாரம் மறுமை வாழ்வின் வெற்றியைக் கருத்தில் கொண்டு இவ்வுலகில் நீதியையும் நேர்மையையும் அடக்கு முறைக்கு எதிரான கொள்கையையும் கொண்டிருக்கும் ஓர் இஸ்லாமிய அரசினால் மட்டுமே முடியும்.

ஆனால், சவூதி அரசோ இந்த தகுதிக்கு கொஞ்சமும் தகுந்த நிலையில் இல்லை என்பதே சவூதி அரசிடம் பணம் பெற்றுக்கொள்ளாத அனைத்து இஸ்லாமிய அறிஞர்களினதும் ஏக முடிவாகும்.

யாராவது ஓர் இஸ்லாமிய அறிஞர் சவூதியில் இருக்கும் சட்டம் இஸ்லாமிய "ரியா" சட்டம் என்று வாதிட்டால் கொஞ்சமும் சந்தேகம் இல்லாமல் அவ்வாறு அவர் பேசுவதற்காக அவருக்கு சவூதி ரியால்கள் கூலியாக வருவதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். அல்லது, அந்த அறிஞருக்கு இஸ்லாமிய 'ரியா சட்டம் சம்பந்தமான அறிவு போதாது என்று அர்த்தம். ஏனெனில், ரிசானா நபீக்குக்கு நிறைவேற்றப்பட்ட மரண தண்டனை சவூதியில் வாழும் அரபு மக்களின் இறைமையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் கருத்திற் கொண்டே நிறைவேற்றப்பட்டதாக சவூதியின் உள்நாட்டலுவல்கள் அமைச்சு உறுதி செய்திருக்கிறது.

அதாவது, சவூதி சட்டம் உலக மக்களுக்கு அல்லது முஸ்லிம்களுக்கு சொந்தமானது அல்ல.

சவூதியில் வாழ்கின்ற ஐரோப்பிய மக்களை பிரித்தானிய நாட்டு சட்டமும், அமெரிக்க மக்களை அமெரிக்க நாட்டு சட்டமும், அராபிய குடிமக்களை அங்கே வாழ்கின்ற பூர்வீகக் கோத்திரக் குடிகளின் கோத்திர செல்வாக்கு தீர்மானித்திருக்கும் கோத்திர சட்ட விதிகளும், அரபி அல்லாத மக்களை அமெரிக்க - சவூதி அரசுகள் இணைந்து நிர்ணயித்து கட்டுப்படுத்தும் அரசியல் சட்டமும் மக்களைக் கட்டுப்படுத்தி அமுலில் இருக்கின்றன. இந்நிலையில் சவூதியில் பலவானுக்கு ஒரு சட்டமும் பலவீனமான ஆண்டிக்கு இன்னுமொரு சட்டமும் என்ற நிலையிலேயே தீர்ப்புகள் எழுதப்படுகின்றன.

இந்த நீதி தவறிய நீதி இஸ்லாமிய "ரியா" சொல்லும் நீதிக்கு முரணானது. ஆகவே, சவூதியில் ரிசானா நபீக்குக்கு வழங்கப்பட்ட தண்டனை இஸ்லாமிய "ரியா" சட்டத்துக்கு முரணானது.

இஸ்லாமிய "ரியா" சட்டம் குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்ற குற்றவாளிக்கு அவன் பக்க நியாயங்களை எடுத்து சொல்லுவதற்கு போதிய சந்தர்ப்பங்களை வழங்குமாறு வேண்டி நிற்கின்றது.

ரிசானா நபீக்குக்கு அவரது பக்க நியாயங்களை வெளிப்படுத்துவதற்கு போதுமான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. ரிசானாவுக்கு அவ்வாறான வாய்ப்புகள் மறுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே, ரிசானா நபீக்குக்கு நிறைவேற்றப்பட்ட தண்டனை இஸ்லாமிய "ரியா" சட்டத்துக்கு முரணானது.

இஸ்லாத்தின் நற்பெயருக்கு களங்கம் கற்பிக்கின்ற எந்த செய்கையையும் இஸ்லாமிய "ரியா" சட்டம் அனுமதிப்பதில்லை.

ரிசானா நபீக்கின் தண்டனையை இஸ்லாமிய "ரியா" சட்டங்களை அமுல்படுத்துகிறோம் என்ற ரீதியில் நிறைவேற்றி அந்தத் தவறுக்கு நியாயம் தேடும் முயற்சியில் இஸ்லாத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுகின்றது. ஆகவே, ரிசானா நபீக்குக்கு நிறைவேற்றப்பட்ட சட்டம் இஸ்லாமிய 'ரியா சட்டத்துக்கு முரணானதாகும்.

இஸ்லாமிய "ரியா" சட்டம் தனது சட்ட தீர்ப்பாளர்களை குற்றம் சுமத்தப்பட்டவர் தான் அந்தக் குற்றத்தை செய்யவில்லை என்று அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு சத்தியம் செய்தால் அந்த சத்தியத்தை ஏற்று அந்தக் குற்றவாளியை மன்னித்து விடுமாறு சட்ட செயல்படுத்துனர்களை வேண்டி நிற்கின்றது.

அவ்வாறான உயர்தர மன்னிப்பில் அல்லாஹ்வின் மீது அல்லாஹ்வின் சட்டத்தை அமுல் நடாத்தும் மக்கள் வைத்திருக்கும் விசுவாசம், கண்ணியம்

பிரகாரம் குற்றத்தின் தன்மை ஆழ்ந்து பரிசீலிக்கப்பட வேண்டும் என்றொரு சட்டமிருக்கிறது.

ஒரு கொலை நடந்திருந்தால் அது திட்டமிட்டு செய்யப்பட்ட கொலையா அல்லது தற்செயலான விபத்தா என்று பரிசீலிக்குமாறு அது நீதித் துறையை பரிந்துரை செய்கிறது. கொலைக்கான காரணம் சரியாக அனுமானிக்கப்பட்டதன் பின்னர்தான் அது தீர்ப்பை சொல்லுமாறு அறிவுறுத்துகிறது.

தற்செயல் விபத்துக்கு ஒருபோதும் மரண தண்டனையை இறுதித் தீர்ப்பாக இஸ்லாமிய "ரியா" சட்டம் தீர்ப்பளிப்பதில்லை. அத்தகைய தற்செயல் விபத்துக்கு இழப்பீட்டுத் தொகையை கொடுத்து மன்னிப்பை பெற்றுக்கொள்ளுமாறு அது குற்றவாளிக்கு அறிவுறுத்துகிறது.

இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு வசதிகள் இல்லாத நிலையில் அக் குற்றவாளி இருந்தால் அவனது பொறுப்பு அவனது குடும்பத்தினர் வசம் பொறுப்பு சாட்டப்படுகிறது. அக் குடும்பத்தினரால் அப் பொறுப்பை ஏற்க முடியாத நிலையில் அந்த இழப்பீட்டுத் தொகைக்கான பொறுப்பு இஸ்லாமிய அரசுடைய பொறுப்பில் கடமையாக்கப்படுகிறது.

ரிசானா நபீக்கின் நிலையில் இந்த செய்கைகள் அனைத்தும் திட்டமிட்ட

வெளிப்படுகின்ற செயல் விளைவுகள் பொதிந்திருக்கின்றன.

ஒரு வாதத்துக்கு குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்ற ஒருவன் இஸ்லாமிய அமைப்பில் நம்பிக்கை வைத்திருக்கும் நீதித்துறையை ஏமாற்றும் நய வஞ்சக நோக்கில் பொய் சத்தியம் செய்ததாக வைத்துக் கொள்வோம். அவ்வாறான நிலை என்றாலும் இஸ்லாமிய "ரியா" சட்டம் அந்தக் குற்றவாளியை மன்னித்துவிடுமாறு அதன் நீதித்துறைக்கு பரிந்துரை செய்கிறது. ஏனெனில், மனிதனின் உள்ளத்தின் ரகசியங்களை மனிதர்களால் அறிந்துகொள்ள முடியாது என்பது இஸ்லாமிய "ரியா" சட்டத்தின் வாதமாகும்.

ரிசானா நபீக் பலமுறை அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தும், இறுதியாக வாளின் பயங்கரமான வெட்டு வீச்சுக்கு சில நிமிடங்களுக்கு முன்னரும் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து தனது பக்க நியாயத்தை நிரூபிக்க தனது சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கெஞ்சிக் கேட்டும் அவரது அபாக்கிய துரதிஷ்ட நிலையை இஸ்லாமிய 'ரியா சட்டத்தை அமுல் நடாத்துகிறோம் என்று வாதிட்ட சவூதி நீதித்துறை அலட்சியப்படுத்தி இருக்கிறது.

அல்லாஹ்வின் பெயரை அற்பமாகக் கருதி நடந்துகொள்ள எக்காரணம் கொண்டும் இஸ்லாமிய "ரியா" யாரையும் அனுமதிப்பதில்லை. இந்நிலையில் அல்லாஹ்வின் பெயர் கூறி செய்யப்பட்ட சத்தியத்தை அலட்சியப்படுத்திய செய்கையும், அல்லாஹ்வை கௌரவிக்காத செய்கைகளும் இஸ்லாமிய 'ரியா சட்டத்துக்கு முரணாகும்.

ஆகவே, சவூதி நிறைவேற்றிய மரண தண்டனையானது இஸ்லாமிய 'ரியா சட்டப் பிரகாரம் செல்லுபடியாகும் என்று தீர்ப்பு சொன்ன நீதிபதிக்கும் மரண தண்டனையை வேண்டி நிற்கும் செயல் விளைவை உருவாக்கி இருப்பதை மிக நுணுக்கமாக அவதானிக்கும் ஒருவரால் இலகுவாக புரிந்துகொள்ள முடியும்.

இந்நிலையில் ரிசானா நபீக்குக்கு எதிரான அனைவரையும் மரண தண்டனை அல்லது அவதூறுக்கான தண்டனை அல்லது தவறுக்கு துணைபோன செயலுக்கான தண்டனை என்ற குற்றவியல் விளிம்பில் இஸ்லாமிய "ரியா" சட்டம் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

இஸ்லாமிய 'ரியா சட்டப்-

முறையில் முற்றிலும் அலட்சியப் படுத்தப்பட்டிருக்கின்றன.

இஸ்லாமிய "ரியா" சட்டம் இத்தகைய அலட்சியங்களை குற்றவாளிக்கு சார்பான விதிகளாகக் கொண்டு குற்றம் சுமத்தப்பட்டவருக்கு சாதகமாக தீர்ப்பளிக்கும்.

ஆனால், சவூதி செயல்படுத்திய இஸ்லாமிய "ரியா" இத் தவறுகளை அனுமதித்து ரிசானா நபீக்குக்கு எதிராக தீர்ப்பளித்தது. இஸ்லாமிய "ரியா" சட்டத்தின் பிரகாரம் இது தண்டனையை வேண்டி நிற்கும் இன்னுமொரு தவறாகும்.

இஸ்லாமிய "ரியா" சட்டத்தின் பிரகாரம் கொலை செய்தவர் தான் கொலை செய்ததை தனது சுய விருப்பத்தின் அடிப்படையில் ஒப்புக்கொள்ள வேண்டும். அல்லது, பருவம் அடைந்த இரண்டு சாட்சிகள் மூலமாக அந்தத் தவறு கட்டாயமாக நிரூபிக்கப்படல் வேண்டும் என்கின்ற கடுமையான நிபந்தனை இருக்கின்றது. அது மட்டுமன்றி, அந்த சாட்சிகள் எக்காரணம் கொண்டும் கொலையுண்டவரின் நெருங்கிய உறவினர்களாக இருக்கக் கூடாது என்றும் அது வலியுறுத்துகிறது. ரிசானா றபீக், தான் கொலை செய்ததை இறுதிவரை ஒப்புக்கொள்ளவில்லை.

அவருக்கு எதிரான சாட்சிகள் அனைவரும் தற்செயல் விபத்தில் இறந்த குழந்தையின் பெற்றோர் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

இஸ்லாமிய "ரியா" சட்டத்தின் பிரகாரம் திட்டமிட்டு செய்யப்பட்ட கொலைக்குத் தான் குற்றம் செய்தவரைக் கொலைக்குப் பதிலாக கொலை செய்ய அனுமதி இருக்கிறது. ரிசானா நபீக்கின் விடயத்தில் கொலைக் குற்றமே நடக்கவில்லையே...!!!

இனியெப்படி மரணதண்டனை?

இந்நிலையில் நாம் அவதானித்த இஸ்லாமிய "ரியா" சட்ட விதிகளின் பிரகாரம் சவூதி அரசினால் ரிசானாவுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையானது அத் தண்டனையை செயல்படுத்துவதற்கு தீர்ப்பளித்தவர்கள்... அதனை நியாயப்படுத்துபவர்கள் அனைவருக்கும் தண்டனையையும், மரண தண்டனையையும் நிறைவேற்ற பரிந்துரை செய்யும் திட்டமிடப்பட்ட படுகொலையாகும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

நன்றி *TAMIL MIRROR*
*21.01.2013-* கருத்துரைப்பு
ஜே.எஸ். அப்துல் ரஸ்ஸாக்

## பொய்யர்கள் நரகத்தில் அழுந்துவர்..

எங்கள் பால்காரன் ஷேகு ஒரு
பொய்யன்
பச்சைப் பொய்யன்
அவனது பொய்கள் அவனது பாலைப்
போலவே வெள்ளை பால் சுத்தமே
இல்லை நீ தண்ணி கலந்திருக்கிறாய்
ஒவ்வொரு நாள் காலையிலும் என்
தாய் இப்படிச் சொல்வாள்
அவளது வழக்கமான சமரசப்படும்
கோபத்துடன்
தண்ணீ அதுக்கு வாய்ப்பே இல்லை
ஷேகு அதை மறுத்துச் சொல்வான்

அவனது தொந்தி அவனது
தகப்பனதைவிடப் பெரியது
அவன் சுமந்துவரும் பெரிய பால்
வாளியைவிடப் பாரமானது
அவன் நடக்கும்போது ஒரு விரித்த
குடைபோல் அது தோன்றும்
அது பொக்கணி வானத்தையன்றி
நம்மையே நோக்கி இருக்கும்

ஒரு லீவு நாளில்
எம் தெருச் சிறுவர்கள்
அவனைச் சூழ்ந்து கொண்டு
கேட்பார்கள்
உன் தொந்திக்குள் என்ன இருக்கு
ஷேகு அது மிச்சம் பெரிசு
பால், அது நிறையப் பால்
பெருஞ் சிரிப்போடு அவன்
சொல்வான், புதிய பசுச் சாணம்
மணக்க
அவனை அவர்கள் நம்புவார்கள்,
ஆனால் ஐயத்துடன்
அவர்கள் சிறுவர்கள், ஆனால்
முட்டாள்கள் அல்ல
சில ஆண்டுகளின் பின்னர்
சிறுவர்கள் வளர்ந்தார்கள், ஷேகு
பொய்யன் என்பது
இப்போது அவர்களுக்கு நிச்சயம்
அதைவிட முக்கியம்
அவன் வேறுபட்ட உச்சரிப்புடன்
பொய் சொல்கிறான் என்பது

ஆகவே ஒரு நாள் அவனது
தொந்தியை அவர்கள் துளைத்தனர்
வெளியேறியதெல்லாம் இரத்தம்
மட்டுமே
பாலே இல்லை
பொய்யர்கள் நரகத்தில் அழுந்துவர்.

## அன்பே உனக்கான என் பிரார்த்தனை

உன் கண்களில் சூரியன்
உதிக்கட்டும்
உன் காலடியில் அது மறையட்டும்
பொய்களிலிருந்து உண்மையை
எடுக்க
என்றும் உன்னால் இயலட்டும்
தீர்ப்பு வழங்காதிருக்கும் தைரியம்
உனக்குக் கிடைக்கட்டும்
பூரணமற்றவளாய், நிச்சயமற்றவளாய்,
திட்டவட்டமற்றவளாய் நீ திகழ்க
அப்போதுதான் உன் எதிரிகளை நீ
மறப்பாய்
அவர்களுக்கெதிராய் வன்மம்
கொள்ளாய்
உன் கனவுகள் எல்லாம் பலிக்கட்டும்
மகிழ்ச்சி உன் உள்ளங்கையில்
வளரட்டும்.

## ஒரு உண்மையான சர்வதேசவாதியின் ஒப்புதல்

நான் ஒரு உலகப் பிரஜை
முன் எப்போதும்
இனி எப்போதும்
ஆனால் சுவாமி,
நான் எங்கு போனாலும்
கராச்சியைப் பற்றியே நினைக்கிறேன்
லாகூரைப் பற்றியே கனவு
காண்கிறேன்
எனக்கு வேறொன்றுமே தெரியாது

ஹாரிஸ் காலிக் கவிதைகள்
- தமிழில்
*எம்.ஏ. நுஃமான்*

**நன்றி; மறுபாதி –**
**கவிதைக்கான காலாண்டிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணேஸ்வரத்தில்...

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் கடந்த மாதம் 24.01.2013 வியாழக்கிழமை அன்று கட்டிட வேலைகளுக்காக கோயிலின் உட்புற நிலம் தோண்டப்பட்டபோது நந்திச் சிற்பமொன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது எனும் செய்தி கசிந்துள்ள.

வெண்மை நிறக்கல்லில் செதுக்கப்பட்ட இச்சிற்பம் சோழர் ஆட்சிக் காலத்திற்கு உரியது என வரலாற்றாளர்கள் கருதுகின்றனர். இச்சிற்பமானது கி.பி. 923-925 வரையான காலப்பகுதிக்குரியது என எதிர்வு கூறப்படுகிறது. இந்நிலையில் 24.01.2013 அன்று கிடைத்த இச்சிற்பம் தொடர்பான செய்திகளை சேகரிக்க 29.01.2013 அன்று கோணேஸ்வரர் ஆலயத்திற்கு மலைமுரசு பத்திரிகையின் செய்தியாளர்களும் படக்குழுவினரும் சென்றிருந்தனர். எனினும் அங்கு கடமையில் இருந்த ஆலய முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் குறித்த சிற்பம் கிடைக்கவில்லை என்றும் அவ்வாறு கிடைத்திருப்பின் தாமே அதை ஊடகப்படுத்தியிருப்போம் எனவும் தெரிவித்திருந்தார். மேலும் எமது பத்திரிகையாளர் இதுபற்றி அங்கிருந்த பூசகர் ஒருவரிடம் வினவிய போதும் அவர் அதை புன்சிரிப்புடன் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈ.பி.எவ் செலுத்தாத...

மாதாந்த சம்பளத்திலிருந்து ஊழியர் சேமலாப நிதியத்திற்கு என தொழிலாளர்கள் 8 சதவீதத்தையும் இலங்கைப் போக்குவரத்துச் சபை 12 சதவீதத்தையும் செலுத்த வேண்டும் எனும் கடப்பாடு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உண்டு. எனினும் 2012ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இலங்கைப் போக்குவரத்துச் சபையின் திருமலை மாவட்ட பிரிவு ஊழியர்கள் தமது பங்களிப்பை தமது சம்பளத்திலிருந்து அறவிட்டு கொழும்புக்கு அனுப்பியுள்ளனர். எனினும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து ஊழியர்களால் அனுப்பிவைக்கப்பட்ட பங்களிப்புடன் இலங்கை போக்குவரத்து சபையின் பங்களிப்பும் சேர்த்து ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்படாமல் இருப்பது தெரியவந்துள்ளது.

இலங்கை ஊழியர் சேமலாப நிதியச் சட்டப்படி ஒவ்வொரு மாதமும் செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு அடுத்துவரும் மாதத்தின் 10ம் திகதிக்குள் ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டும்.

எனினும் இலங்கைப் போக்குவரத்து சபை தற்போதுவரை செலுத்தப்படாமலிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து தொடரப்பட்ட வழக்கில் பொறுப்பான சிலர் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## பொலிஸார் தாக்குதல்...

மூதூர் ஜின்னா நகர் கிராமத்தை சேர்ந்த 23 வயதான முஹம்மது மஹ்ரூப் அஸ்வர் என்பவரே மூதூர் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் இளம் கன்றுக் குட்டியொன்றை நேற்று செவ்வாய்க்கிழமை மாலை கடும் மழைபெய்து கொண்டிருந்த நிலையில் முச்சக்கர வண்டியில் தனது வீடுக்கு கொண்டு சென்றுள்ளார்.

இதன்போது முச்சக்கர வண்டியை நிறுத்தி பரிசோதித்த பொலிஸார் அவரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். இதனையடுத்து அவரை கடுமையாகத் தாக்கியதோடு, பலத்த காயங்களுடன் இன்று புதன்கிழமை மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.



## லெப்டினன் கேணல் கைது

பணியாற்றும் லெப்டினன் கேணல் தர அதிகாரி ஒருவரும் அவருக்கு உதவிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவ டபுள் கப் வாகனத்தில் முல்லைத்தீவு கடற்கரைக்குச் சென்ற இவர்கள் "பாரா 3" என்ற கப்பலின் சிதைவுகள் உள்ள கடற்கரைப் பரப்பில் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அதனை அவதானித்து தேசிய பாதுகாப்புப் படைப் பிரிவினரின் எச்சரிக்கை அழைப்பினைத் தொடர்ந்து இராணுவப் பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சீனக்குடா விமானப் படை..

சீனக்குடா விமான நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. "தகவல் தொடர்பாடல் சேவையினை அனைவருக்கும் கிடைக்கத்தக்க தாக்குதல்'' எனும் இலங்கையரசின் முயற்சியின் அடிப்படையிலேயே இக்கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக்கூடத்தை சீனக்குடா வான்படை கல்லூரியின் தளபதி எயார் கொமாண்டோ எஸ்.கே. பத்திரன அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## கிழக்கு மாணவனின் சலனப்படம்..

உலகத்தினை ஆறு பிராந்தியங்களாகப் பிரித்து உலக வங்கியால் நடாத்தப்பட்ட உலக சலனப்பட போட்டியில் தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கையின் மட்டக்களப்பு மாவட்ட பட்டிருப்புத் தேசிய பாடசாலை மாணவன் திவ்யராஜ் சயந்தன் வெற்றி பெற்றுள்ளார்.

"தெருவோரத்தில் வியாபாரம் செய்யும் சிறுவன்'' எனும் தலைப்பிடப்பட்ட இவரது சலனப்படம் ''சமவுரிமையற்ற தன்மையைப்'' பிரதிபலிக்கும் வகையின் கீழ் பரிசுக்காக தேர்வாகியுள்ளது.

17 வயதின் கீழ் போட்டியிட்ட இவரது படம் இலங்கையிலிருந்து தெரிவான ஒரே படம் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## எதிர்க் கட்சிகளின் கூட்டணி உடன்படிக்கையில் கைச்சாத்திட செயற்குழு கூடி முடிவெடுக்கும்

"எதிர்க் கட்சிகள் கூட்டணி உடன்படிக்கையில் கையெழுத்திடுவது பற்றி முடிவு எடுக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயற்குழு விரைவில் கூடி தீர்மானம் எடுக்கும்'' என்று அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

"தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்குழு விரைவில் கூடி பத்து எதிர்க்கட்சிகள் சேர்ந்து அமைக்கும் கூட்டணியின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பம் இடுவது பற்றி ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்கும். அதன் பின்னரே எதிர்க்கட்சிகளின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கையெழுத்திடும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"எதிர்க் கட்சிகள் சேர்ந்து கூட்டணி ஒன்றை அமைப்பது ஒரு நல்ல ஆரோக்கியமான விடயம். எதற்கும் கூட்டமைப்பின் செயற்குழு இவ்விடயத்தை ஆராய்ந்துதான் முடிவு எடுக்க வேண்டும்" என்றும் தெரிவித்தார்.

## பெரும்பாக திருக்கோணமலை ...

50வீத குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் ஆற்றல் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் இரண்டு வருடங்களில் நிறைவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்காக 5000 மில்லியன் ரூபாய்கள் செலவு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்தினூடாக மகாவலி கங்கையிலிருந்து கடலுடன் கலக்கும் நீரை அல்லைக் கந்தளாயிலிருந்து பாரிய குழாய்களினூடாக கந்தளாய் நீர்வழங்கல் திட்டத்திற்கு வழங்கக்கூடியதான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக நிறுவப்பட்டுள்ள புதிய குழாய்களின் நீளம் சுமார் 22 கிலோமீற்றர்கள் ஆகும். இப்புதிய திட்டத்தினூடாக கந்தளாய், திருக்கோணமலை, தம்பலகாமம், கிண்ணியா மற்றும் பகுதியளவில் குச்சவெளிப் பிரதேசம் ஆகியவை தமது குடிநீரைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர். இப்பிரதேசத்திலுள்ள 330,000 மக்கள் குடிநீர் வழங்கல் திட்டத்தினூடாக பயனடையவுள்ளனர்.

இத்திட்டத்திற்கான நிதியுதவியை பிரான்ஸ் அரசு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கென பிரான்ஸ் சுமார் 23 மில்லியன் யூரோக்களை பிரெஞ் அபிவிருத்தி அமைப்பினூடாக 69 மில்லியன் யூரோக்கள் இலகு கடனாக வழங்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்டியன் றொபிச்சொன் தெரிவித்தார். இலங்கையின் பெரும்பாலான முக்கியமான நீர் வழங்கல் திட்டங்களுக்கு பிரான்ஸ் அரசாங்கமே நிதியுதவி அளிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.



## ஆசிரிய இடமாற்றத்தில்...

மாற்றலாகி வந்து சுமார் இரண்டு வருடங்கள் கூட முழுமையாக முடிவடையாத போதே அதற்க முன்னர் அவர் 14 வருடங்கள் பணியாற்றிய ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அதற்கான காரணத்தினை ஆராய முற்பட்ட போது ஆதிகோணேல்வரா மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆசிரியை ஒருவர் முள்ளிப் பொத்தானையிலுள்ள பாடசாலையொன்றுக்கு நவம்பர் 2012ல் இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் பின்னர்அவ்விடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டு அவர் குளக்கோட்டன் தமிழ்வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டதாகவும் அவரிற்குப் பதிலாகவே குளக்கோட்டன் வித்தியாலயத்தில் இரண்டு வருடங்கள் கூட சேவையாற்றாத ஆசிரியையை திரும்பவும் ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கு மாற்றியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக இரண்டு வருடங்கள் கூடக் கழியாத ஆசிரியையின் இடமாற்றம் முறையற்றது என்பதுடன் அதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரி குளக்கோட்டன் பாடசாலையின் அபிவிருத்திக் குழு மார்கழி 2012ல் வலயக் கல்விப் பணிப்பாளரைச் சந்தித்துள்ளது. அப்போது திருமலை வலயக் கல்விப் பணிப்பாளர் இவ்விடமாற்றத்தை நிறுத்துவதாக வாய்மொழி உறுதியை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு வழங்கியதாகத் தெரியவருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக எதிர்வரும் வாரங்களில் முழு விடயங்களும் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நாளொன்றுக்கு 41,000 மென்ரக வாகனங்கள் கொழும்பிற்குள் நுழைவு

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு நகருக்குள் நுழையும் வாகனங்கள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட போது அந் நாளின் காலைவேளையில் சுமார் 41,000 மென்ரக வாகனங்கள் கொழும்பு நகருக்குள் நுழைந்ததாக தெரியவந்துள்ளது.

காலை வேளையில் சுமார் 3 மணித்தியாலங்கள் மட்டுமே மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வினால் அந்நாளில் கடும் வாகன நெருக்கடி ஏற்பட்டதாக தெரியவருகின்றது.

அதிகரித்துவரும் வாகன நெருக்கடியை குறைக்கும் மாற்று வழிகளுக்கான ஆய்வினை படிவங்களை வழங்கி காவல்துறையினர் மேற்கொண்டிருந்தனர்.

கொழும்பினைத் தொடுக்கும் புதிய வீதிகளை அமைப்பதற்கான புதிய முன்மொழிவுகளும் இவ் ஆய்வின் போது பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தெரிந்து கொள்ளுங்கள்...

- ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகள்.
- கருவில் முதன் முதலில் உருவாகும் உறுப்பு - இதயம்.
- மனிதன் இறந்து போனதும் முதலில் செயலிழக்கும் உறுப்பு - இதயம்.
- நாம் இறந்த பிறகும் கண்கள் 6 மணிநேரம் பார்க்கக்கூடிய தன்மையுடையது.
- நீங்கள் பாவிக்கும் Pen Drive இன் தமிழ்ப்பதம் - விரலி என்பதாகும்.
- திருக்கோணமலை 1796 பிரித்தானியர் வசமானது.
- இலங்கையின் இறுதிச் சிங்கள மன்னன் வீர பராக்கிரமபாகு நரேந்திர சிங்கன் ஆவான்.
- இலங்கையின் இறுதி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஆவான்.

## பூனை பிரபு

முன்னொரு காலத்தில் உழவன் ஒருவன் பூனை ஒன்றை வளர்த்து வந்தான். கிழடாகிப் போன அந்தப் பூனையால் எலிகளைப் பிடிக்க முடியவில்லை. இந்தப் பூனையால் எந்தப் பயனும் இல்லை. இதைக் காட்டில் விட்டு விடுவோம், என்று நினைத்தான் அவன். அப்படியே அதைக் காட்டில் விட்டுவிட்டு வந்தான். அங்கே உலவிக் கொண்டிருந்தது பூனை. பெண் நரி ஒன்று அதைப் பார்த்தது. "ஐயா! தாங்கள் யார்? இப்பொழுது தான் தங்களை முதன் முறையாகப் பார்க்கிறேன்" என்று கேட்டது அது. "நான் பூனை பிரபு" என்று கம்பீரமாகச் சொன்னது பூனை. அதன் அழகிலும் கம்பீரத்திலும் மயங்கியது நரி. "ஐயா! என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். உண்மையுள்ள மனைவியாக நான் நடந்து கொள்வேன். உங்கள் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பேன்" என்றது. பூனையும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது. இரண்டிற்கும் திருமணம் நடந்தது. தான் சொன்னபடியே நடந்தது நரி. தனியே சென்று கோழிக் குஞ்சுகளைப் பிடித்து வரும் பூனைக்கு உண்ணக் கொடுக்கும். சில சமயம் அது பட்டினியாகவே கிடக்கும். ஒரு நாள் உணவு தேடச் சென்றது நரி. வழியில் அதை முயல் ஒன்று சந்தித்தது. "நண்பனே! உன் வீட்டிற்கு நான் வரலாம் என்று இருக்கிறேன். எப்பொழுது வருவது?" என்று கேட்டது முயல். "என் வீட்டிற்கு வரும் எண்ணத்தை விட்டுவிடு. அங்கே பூனை பிரபு இருக்கிறார். அவர் கொடூரமானவர். உன்னைக் கண்டால் ஒரு நொடியில் கொன்று தின்று விடுவார்" என்றது நரி. அங்கிருந்து ஓடிய முயல் வழியில் ஓநாயைச் சந்தித்தது. "உனக்குச் செய்தி தெரியுமா? நரியின் வீட்டில் பூனை பிரபு இருக்கிறாராம். அவர் மிகக் கொடூரமானவராம். யாரையும் கொன்று தின்று விடுவாராம்" என்றது அது. இந்த விந்தையான செய்தியைப் பன்றியிடம் சொன்னது ஓநாய். பன்றி இதைக் கரடியிடம் சொன்னது. முயல், ஓநாய், பன்றி, கரடி நான்கும் ஒன்றாகக் கூடின. "எப்படியாவது பூனை பிரபுவை நாம் பார்க்க வேண்டுமே?" என்றது கரடி. "உயிரின் மீது உனக்கு ஆசை இல்லையா?" என்று கேட்டது முயல். "எனக்கு நல்ல வழி ஒன்று தோன்றுகிறது நாம் நால்வரும் சேர்ந்து பெரிய விருந்திற்கு ஏற்பாடு செய்வோம். பூனை பிரபுவையும் நரியையும் விருந்திற்கு அழைப்போம்" என்றது ஓநாய். எல்லோரும் இதற்கு ஒப்புக் கொண்டனர். மேசையின் மேல் விதவிதமான உணவுப் பொருள்கள் பரிமாறப் பட்டன. "யார் சென்று பூனை பிரபுவை அழைப்பது?" என்ற சிக்கல் எழுந்தது. "எனக்கு தூங்கி வழிகின்ற முகம். நான் சென்று எப்படி அழைப்பேன்?" என்று மறுத்தது பன்றி. "எனக்கு அதிக வயதாகி விட்டது. உடல் நலமும் சரியில்லை" என்றது ஓநாய். "ஏதேனும் ஆபத்து என்றால் என்னால் வேகமாக ஓட முடியாது" என்றது கரடி. மூன்றும் முயலைப் பார்த்து, "விருந்துச் செய்தியை நீதான் சொல்லிவர வேண்டும்" என்றன. முயல் நடுங்கிக் கொண்டே நரியின் வீட்டை அடைந்தது. நீண்ட நேரம் வெளியிலேயே காத்திருந்தது. வெளியே வந்த நரி முயலைப் பார்த்து வியப்பு அடைந்தது. "பன்றி, ஓநாய், கரடி மூன்றும் என்னை இங்கே அனுப்பின. நால்வரும் சேர்ந்து விருந்திற்கு ஏற்பாடு செய்துள்ளோம். உங்களுக்காகவே இந்த விருந்து நீங்களும் பூனை பிரபுவும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்" என்றது முயல். "நல்லது. நான் விருந்திற்கு வருகிறேன். பூனை பிரபுவும் என்னுடன் வருவார். நாங்கள் வரும் போது நீங்கள் நால்வரும் எங்காவது ஒளிந்து கொள்ளுங்கள் பூனை பிரபு உங்களைப் பார்த்தால் நீங்கள் செத்தீர்கள். விருந்து எங்கே நடக்கிறது?" என்று கேட்டது நரி. இடத்தைச் சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தது முயல். தன் நண்பர்களைச் சந்தித்து நடந்ததைச் சொன்னது அது. பயந்து போன நான்கும் என்ன செய்வது என்று சிந்தித்தன. "நான் அந்த மரத்தில் ஏறிக் கொள்கிறேன்" என்றது கரடி. "அந்தப் புதரில் நான் ஒளிந்து கொள்கிறேன்" என்றது ஓநாய். "உன் அருகிலேயே நானும் பதுங்கிக் கொள்கிறேன்" என்றது முயல் "அடர்ந்த அந்த மரங்களுக்குப் பின்னால் நான் மறைந்து கொள்கிறேன்" என்றது பன்றி. பூனை பிரபுவும் நரியும் வரும் ஓசை கேட்டது. நான்கும் பதுங்கிக் கொண்டன. பலவிதமான உணவுப் பொருள்களைப் பார்த்தது பூனை. அதற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "மியாவ், மியாவ்" என்று கத்திக் கொண்டே சாப்பிடத் தொடங்கியது. புதரில் இருந்த ஓநாய், "எவ்வளவு பயங்கரமான விலங்கு? என்ன கொடூரமான குரல்? சாப்பிடும் வேகத்தைப் பார்த்தால் நம் விருந்து அதற்குப் போதாது. நம்மையும் கொன்று தின்னும் போல இருக்கிறது" என்றது. "ஆமாம்" என்று நடுங்கிக் கொண்டே சொன்னது முயல். மரத்தில் இருந்த கரடியும் மறைந்து இருந்த பன்றியும் நடுங்கின. பூனை விருந்தை வயிறார உண்டது. மேடையின் மேல் படுத்துத் தூங்கத் தொடங்கியது. மரத்தின் மறைவில் பதுங்கி இருந்த பன்றியின் வாலைக் கொசு ஒன்று கடித்தது. உடனே பன்றி தன் வாலை அசைத்தது. சத்தம் கேட்டு விழித்தது பூனை. பன்றியின் வாலை எலி என்று தவறாக நினைத்தது அது. "மாட்டிக் கொண்டாயா?" என்று கத்திக் கொண்டே எலியைப் பிடிக்கப் பாய்ந்தது. நேராகப் பன்றியின் முகத்தில் போய் மோதியது அது. எதிர்பாராமல் நடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது பன்றி. அங்கிருந்து "தப்பித்தேன்" என்று கத்திக் கொண்டே ஓட்டம் பிடித்தது. பன்றியைக் கண்டு பயந்த பூனை ஒரே பாய்ச்சலில் அருகில் இருந்த மரத்தில் ஏறியது. அங்கிருந்த கரடி தன்னைத்தான் பூனை பிரபு கொல்ல வருகிறார் என்று பயந்தது. விரைந்து மரத்தின் உச்சிக் கிளைக்குச் சென்றது. அதன் எடை தாங்காமல் கிளை முறிந்தது. புதரில் மறைந்திருந்த ஓநாயின் மேல் விழுந்தது அது. அலறி அடித்துக் கொண்டு ஓநாயும் ஓட்டம் பிடித்தது. முயலும் அதைத் தொடர்ந்து ஓடியது. வலியைத் தாங்கிக் கொண்டு "தப்பித்தோம் பிழைத்தோம்" என்று கரடியும் ஓடியது. நீண்ட நேரத்திற்குப் பிறகு நான்கும் சந்தித்தன. "பூனை பிரபு பார்ப்பதற்குச் சிறியவராக இருக்கிறார். நம் நால்வரையும் கொன்று தின்றிருப்பார். நல்ல வேளை தப்பித்தோம்" என்றது கரடி. மற்ற மூன்றும் "ஆமாம்" என்றன. அதன் பிறகு பூனை பிரபுவின் வழிக்கே அவை செல்லவில்லை.




## சருமப் பாதுகாப்பு..

*சாதாரண சருமம்*

சாதாரண சருமம் உடையவர்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை. மேலும் இவ்வகை சருமத்திற்கு அதிக கவனிப்போ, போஷாக்கோ தேவையில்லை. சாதாரண கவனிப்பே போதுமானது. மேலும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை மசாஜ் செய்து அதற்கேற்றவாறு பேக் போட்டு வர சருமம் பொலிவு பெறும். சாதாரண சருமத்திற்கான பராமரிப்பு:

- பால், பாலேடு கொண்டு பேக் போடுவதால் சருமத்திலுள்ள அழுக்கை இயற்கையான முறையில் நீக்குவதோடு முகத்திற்கு பளபளப்பும் உண்டாகும்.
- எலுமிச்சைச் சாறுடன் பாலேடு கலந்தும் முகத்தில் பூசி வரலாம்.
- ரோஸ் வாட்டரை பஞ்சில் முக்கி முகத்தில் ஒரே சீராக தடவி அரை மணி நேரம் கழித்து கழுவி வர முகம் புத்துணர்ச்சி பெறும்.
- எலுமிச்சைச் சாறு, வெள்ளரிச் சாறு இரண்டையும் கலந்து முகத்தில் பூசி அரைமணி நேரம் கழித்து கழுவி வந்தால் முகம் பொலிவு பெறும்.
- எலுமிச்சைச் சாறுடன் சிறிதளவு தேன் கலந்து முகத்தில் பூசி, சிறிது நேரம் கழித்து கழுவி விடுவதனால் முகத்திலுள்ள கரும் புள்ளிகள் நீங்கி முகம் பொலிவடையும்.



*எண்ணெய் பசையுள்ள சருமம்*

எண்ணெய்ப் பசையுள்ள சருமம் பார்ப்பதற்கு 'பளபள' என்று தோற்றமளித்தாலும் விரைவில் தூசியும், அழுக்கும் சேர்ந்து விடும். இதனால் இவ்வகை சருமம் உடையவர்களுக்கு அதிக எண்ணெய் பசை காரணமாக முகப்பருக்களும் வரக்கூடும். ஆதலால் முகத்தை அடிக்கடி கழுவுவது நல்லது. இவர்கள் கொழுப்புச் சத்து உணவுக்குப் பதில் பழங்கள், பால் மற்றும் சத்துள்ள உணவுகளை சாப்பிடுவது நல்லது.



இவ்வகை சருமத்திற்கான சில ***பராமரிப்பு முறைகள்:***

நன்றாகப் பழுத்த வாழைப் பழத்தில் சில துளி எலுமிச்சைச் சாற்றைச் சேர்த்து நன்றாக மசித்து பேக் போட்டு 15 நிமிடங்கள் கழித்து முகம் கழுவ வேண்டும்.

முட்டையின் வெள்ளைக்கரு ஒரு தேக்கரண்டி, தேன் ஒரு தே.கரண்டி, எலுமிச்சைச் சாறு சில துளி மூன்றையும் நன்றாகக் கலந்து முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் பூசி 15 நிமிடங்கள் வரை கழித்து முகம் கழுவ வேண்டும்.

தக்காளிச் சாறுடன் எலுமிச்சைச் சாற்றை சேர்த்து பேக் போட்டு 20 நிமிடங்கள் கழித்து முகம் கழுவிவர சருமத்தில் காணப்படும் துவாரங்கள் இறுக்கமாவதோடு, நல்ல நிறத்தையும் கொடுக்கும்.

வெள்ளரிச்சாறு 4 தே.கரண்டி, தேன் 1 தே.கரண்டி, எலுமிச்சைச் சாறு 1 தே.கரண்டி இம்மூன்றையும் நன்றாகக் கலந்து முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் தடவி வர பருக்கள் மறைந்து நல்ல நிறத்தைக் கொடுக்கும்.

நன்கு பழுத்த பப்பாளிப் பழத்தை நன்றாக மசித்து முகத்தில் பேக் போட்டு 15 நிமிடங்கள் கழித்து கழுவி வர அதிகமாக எண்ணெய் சுரப்பதைக் கட்டுப்படுத்துவதோடு நல்ல போஷாக்கையும் தருகிறது.

## புடிங்

### I. கரமல் புடிங்

*தேவையான பொருட்கள் :* முட்டை - 5, ரின் பால் - 1 ரின், சீனி - 2 மே.கரண்டி, வனிலா - 1 தே.கரண்டி

***செய்முறை:*** முட்டையை நன்கு அடிக்கவும். பின் பாலைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டு நன்கு அடித்து வனிலாவையும் சேர்த்துக் கொள்ளவும். பின்னர் வேறொரு பாத்திரத்தில் சீனியைப் போட்டுப் பொன்னிறமாக வரும் வரை சூடேற்றவும். அக்கரமலைப் பாத்திரத்தின் உட்பாகம் முழுவதும் பரவிப் பூசி அப்பாத்திரத்திலேயே கலவையை ஊற்றி அப்பாத்திரத்தின் வாயை பொலித்தீன் பேப்பரினால் மூடிக்கட்டவும். பின்னர் அக்கரைசலை நீராவியில் அவித்தெடுக்கவும். அவிந்ததும் பாத்திரத்தை இறக்கி ஆறவைத்து, குளிரூட்டியில் வைத்துப் பின் பரிமாறவும்.





### II. சொக்லெட் புடிங்

*தேவையான பொருட்கள்:* ரின் பால் - 1 ரின், முட்டை - 4, கொக்கோ பவுடர் - 1 மே. கரண்டி, வனிலா - 1 தே.கரண்டி, சுடுதண்ணீர் - அரை கப்

***செய்முறை:*** முட்டையை நுரை வரக்கூடியதாக அடிக்கவும். கொக்கோப் பவுடரை அரை கப் சுடுநீரில் கரைத்து வடித்தெடுக்கவும். பின் ரின் பாலுடன் அடித்த முட்டை, கொக்கோ, வனிலா இவற்றை நன்றாகக் கலந்து அடிக்கவும். எண்ணெய் பூசிய பாத்திரத்தில் ஊற்றி மேலே கரமல் புடிங்கிற்கு செய்தது போல் நீராவியில் அவித்தெடுக்கவும். பின் குளிரேற்றி பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தைவிட அதிக சலுகைகளைப் பெறவுள்ள மத்தள விமான நிலையம்

மத்தளையில் சர்வதேச விமானங்களைத் தரையிறக்குவதற்காக அவ்வாறு தரையிறங்கும் விமானங்களுக்கு "வானைத் திறந்து விடும்" (Open Skies Policy) நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக வான்பரப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். வானைத் திறந்து விடும் கொள்கை என்பது திறந்த சந்தை நடவடிக்கைகளை எவ்வித மட்டுப்பாடுகளும் இன்றி மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் இறங்கும் சர்வதேச விமானங்களுக்கு ஏற்படுத்தவுள்ள வசதியாகும். இதனூடாக பெருமளவு சர்வதேச விமானங்களை இலங்கைக்குள் உள்ளீர்க்க முடியுமென அமைச்சர் மேலும் தெரிவித்தார். எனினும் இச்சலுகை இலங்கையின் முதலாவது சர்வதேச விமான நிலையமான பண்டாரநாயக்கா விமான நிலையத்துக்குப் பொருந்தாது என அவர் மேலும் தெரிவித்தார்.

### மிகப்பெரிய சர்வதேச பல்கலைக்கழகம் இலங்கையில்

மீரிகமவிலுள்ள ஏற்றுமதி செய்முறைப்படுத்தல் வலயத்தில் சுமார் 120 ஏக்கர் நிலப்பரப்பில் ஐக்கிய இராச்சியத்தின் மத்திய லங்கா ஷேர் பல்கலைக்கழகத்தின் வளாகத்தினை திறப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்புச் சபையூடாக உயர்கல்வி அமைச்சரின் அனுமதியுடன் 99 வருட குத்தகைக்கு இந்நிலம் அப் பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 100 மில்லியன் அமெரிக்க டொலர்களில் அமையவுள்ளது இத்திட்டம்.

### லங்கா IOC யின் டீசல் தரமற்றது என தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

லங்கா IOC யினால் இறக்குமதி செய்யப்பட்ட 5000 தொன் டீசல் எரிபொருள் தரக்குறைவானது என்பதால் விநியோகத்திற்கு வழங்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. மேலதிக சேவைகள் மேற்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்படும் வரை இந்த எரிபொருள் பாவனைக்கு வராது. இந்த எரிபொருள் இருப்பானது சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக லங்கா IOC யின் முகாமைப்பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த வருடம் தரக்குறைவான பெற்றோல் இலங்கைக்குள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல வாகனங்கள் பழுதடைந்தமை குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து அக்காலத்தில் பணியிலிருந்து பெற்றோலிய வளத்துறை அமைச்சின் செயலாளர் டைட்டஸ் ஜெயவர்த்தனவும் அக்கூட்டுத்தாபனத்தின் வர்த்தக முகாமையாளர் உதித்த டொலஸ்கொலவும் இவ்வாறான தரம் குறைந்த பெற்றோலை இறக்குமதி செய்ததற்காக இவர்கள் குற்றச்சாட்டுக்களுக்குள்ளாகி கைது செய்யப்பட்டிருந்தனர். தற்போது இவர்கள் இருவரும் பிணையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

### பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க காவல்துறை ரோந்து

கடந்த வாரம் பெண்ணொருவர் மூன்று முச்சக்கர வண்டிச் சாரதிகளால் குழுப்பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதை தொடர்ந்து கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் காவல்துறையின் மேலதிக ரோந்துக்கள் நடைபெறவுள்ளன.

அத்துடன் தெருவிளக்குகளை செயற்பட வைத்தல் முச்சக்கர வண்டிச் சாரதிகளின் நடவடிக்கைகளை கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். விஷேடமாக பெண்கள் வேலை முடிந்து வீட்டுக்குச் செல்லும் பிரதான பாதைகளில் இந்நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படவுள்ளன.

## The Sunday Observer:

### இரு அதிவேகப் பாதைகள் மிக விரைவில் திறக்கப்படும்

இரண்டு அதி வேகப் பாதைகளான கட்டுநாயக்கா அதி வேகப் பாதை மற்றும் மாத்தளை அதி வேகப் பாதை ஆகிய இரண்டும் இவ்வாண்டின் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் திறந்து வைக்கப்படும் என பெருந்தெரு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இவ்விரு அதி வேகப் பாதைகளினதும் கட்டுமானப் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளதாக அவர் தெரிவித்தார். அண்மையில் இலங்கையின் சனாதிபதி இவ்விரு பாதைகளின் பணிகளை மிக விரைவாக நிறைவேற்றும் படி உத்தரவிட்டுள்ளார். கொழும்பில் ஆரம்பித்து கட்டுநாயக்காவில் முடிவுறும் முதலாவது அதிவேக பாதையினூடாக கொழும்பிலிருந்து கட்டுநாயக்காவுக்கு 20 நிமிடத்தில் பயணம் மேற்கொள்ளமுடியும்.

### மதச்சுதந்திரம் மற்றும் ஹலால் சான்றிதழ் பிரச்சனைகளைத் தீர்க்க பாராளுமன்ற தெரிவுக்குழு

பாராளுமன்றம் பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றினை அமைத்து நாட்டில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட மத அமைதியின்மை மற்றும் ஹலால் தரச்சான்றிதழ் தொடர்பான விடயங்களை ஆராயவுள்ளது. இவ்விரண்டிற்கும் ஒரு நிரந்தர தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் முகமாக இப் பாராளுமன்ற தெரிவுக் குழு செயற்படவுள்ளது. ஆளுங்கட்சியின் பாராளுமன்ற குழுத்தலைவர் நிஹால் ஸ்ரீபாலடிசில்வா அண்மையில் "ஹலால் சான்றிதழை அரசாங்கம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கை அண்மைக்காலமாக எழுப்பப்படுகின்றது. இது அரசாங்கத்துக்கு ஒரு தேவையில்லாத விடயம். ஏனெனில் ஹலால் சான்றிதழ் ஒரு தனிப்பட்ட விடயம்" என அவர் தெரிவித்தார்.

### காவல்துறை அதிகாரிகளைக் கடத்தித் தாக்கிய வனவளப் பாதுகாப்பு அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இரு வாரங்களுக்கு முதல் இரகசிய தகவல் ஒன்றையடுத்து காட்டுக்குள் கஞ்சா வேட்டைக்குச் சென்ற இரண்டு காவல் துறை அதிகாரிகளை கடத்தி தாக்கி காட்டுக்குள் அடைத்து வைத்திருந்ததான சந்தேகத்தின் பேரில் ஏழு வனவளப்பாதுகாப்புத் துறையினர் அவ்விரு காவல்துறை அதிகாரிகளினால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து அந்த ஏழு பேரும் பெப்ரவரி பன்னிரண்டாந் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் கஞ்சா கடத்தல் புள்ளி ஒருவருடன் இவ் ஏழு பேரும் தொடர்பு கொண்டிருப்பதுடன் இவ்விடயம் தொடர்பான விசாரணைக்கு சீருடையில் சென்ற இரண்டு காவல்துறையினரையும் அவர்களுக்குத் தகவல் வழங்கும் பொதுமகனொருவரையும் இப்பணியினை செய்யவிடாமல் வனவள பாதுகாப்பு துறையினர் தடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் காவல் துறையினரின் துப்பாக்கிகளை அபகரிக்கும் செயற்பாட்டின் போது பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்துள்ளது.

### அபிவிருத்திக்கு ஆயுதப்படை – பாராட்டுப் பெறும் அரசு

அபிவிருத்திப் பணிகளுக்கு நாட்டிலுள்ள ஆயுதப்படைகளை இலங்கை அரசு பயன்படுத்துவதை நல்லது என்று பிரதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கல்வி, சுகாதாரம், விளையாட்டுத்துறை மற்றும் கிராமிய அபிவிருத்திப் பணிகளில் இலங்கை இராணுவத்தைக் கடந்த ஆண்டில் பயன்படுத்தி சுமார் 1,500 மில்லியன் ரூபாய்களை அரசு சேமித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். சாதாரணமாக யுத்தம் முடிந்த பின் இராணுவத்தினர் தமது வீடுகளுக்குத் திரும்புவர். எனினும் அவர்களனால் தமது சமூகத்துடன் இயைபுபட முடியாது. இதனால் கடுமையான பிரச்சினைகள் எழுகின்றன. ஆனால் இதனை தவிர்க்க அரசு இத்திட்டத்தை செயற்படுத்துவதாக அவர் தெரிவித்தார்.

## The Leader

### GSP சலுகைக்காக இலங்கை விண்ணப்பிக்கும்

ஆகஸ்ட் 2010 ம் ஆண்டில் ஐரோப்பிய யூனியனினால் இலங்கைக்கு நீக்கப்பட்ட GSP வரிச்சலுகையை மீளப் பெற்றுக்கொள்ளும் முனைப்புக்களில் இலங்கை இறங்கியுள்ளது. இச்சலுகையினை மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டதால் இலங்கை சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை தற்போது வரை இழந்துள்ளது. எனினும் அரசாங்கம் இவ்விழப்பினை ஏற்பதற்கு தயாராகவில்லை. சுமார் இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் பெருமளவு தொழிற்சாலைகள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கானோர் வேலையின்றி வீதியிலெறியப்பட்ட பின் இலங்கை அரசுக்கு GSP சலுகையை மீளப்பெற்றுக்கொள்ளும் தேவையை மேற்போந்த இரு நிலைகளும் உருவாக்கியுள்ளன. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளதை the Sunday Leader ஆல் உறுதிபட தெரிந்து கொள்ளக்கூடியதாகின்றது. எனினும் இறுதி விண்ணப்பப்படிவம் 2014 ம் ஆண்டு ஜூன் இலேயே அனுப்பப்படும்.

2010ம் ஆண்டில் GSP சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் மீளப்பெற்றுக் கொண்ட போது அதற்கான காரணங்களாக குடியுரிமை, தொழிலுரிமை, சிறுவர் உரிமை ஆகிய மூவுரிமைகள் தொடர்பாகவும் சர்வதேச சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தாது இலங்கை உள்ளது என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே GSP வரிச்சலுகையை மீளப்பெற்றுக்கொண்டுள்ளது.

### நவநீதம் பிள்ளையின் அறிக்கையை குறை கூறியது அரசு

எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையர் நவநீதம் பிள்ளை அவர்கள் தாக்கல் செய்யவுள்ள அறிக்கை தொடர்பாக தமது அதிருப்தியை இலங்கை அரசு வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கை நியாயமற்ற பக்கச்சார்பான அறிக்கை என இலங்கை அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கையானது பிரதானமாக இணக்கப்பாடு மற்றும் இலங்கை பொறுப்புக்கூறல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொறிமுறையை இலங்கை ஏற்றுக்கொள்ள மறுப்பதை முக்கியமாக உள்ளடக்கியுள்ளது.

### மரணதண்டனையை மீளக் கொண்டுவரும் முன்மொழிவு: அமைச்சர் சமர்ப்பிப்பு

மரணதண்டனையை மீளக் கொண்டுவரும் முன்மொழிவு - அமைச்சர் சமர்ப்பிப்பு

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளீர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மரணதண்டனையை மீள அமுல்படுத்தும் முன்மொழிவினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அவர் அட்டோனி ஜெனரல் திணைக்களத்திலும் இவ்விடயம் தொடர்பான அறிக்கையை முன்மொழிந்துள்ளார்.

### அகில இலங்கை ஜமமியத்துள் உலமா சபையை நீதிமன்றத்திற்கு இழுக்கும் பொதுபலசேனா அமைப்பு

ஹலால் சான்றிதழை வழங்கிவரும் அகில இலங்கை ஜம்மியத்துள் உலமா சபையை இவ்விடயம் தொடர்பாக நீதிமன்றத்தில் நிறுத்த பொதுபலசேனா அமைப்பு முயற்சிப்பதாக அவ்வமைப்பின் செயலாளர் சங்கைக்குரிய பலகொட்டட்டே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். இதற்காக வழக்குத்தாக்கல் செய்யப் போவதாக தெரிவித்துள்ள அவர் இலங்கையில் இச்சபைக்கு ஹலால் சான்றிதழை வழங்கும் பொறுப்பை யார் கொடுத்தது என்பது பற்றியும் ஆராயப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாதுகாப்பு அமைச்சு தம்முடன் பேசியதாகவும் அப் பேச்சுக்கள் நாட்டில் தமது போராட்டத்தால் எழுந்த சுமுகமற்ற நிலை தொடர்பாக நடாத்தப்பட்டது எனவும் தெரிவித்த அவர் தாம் தனிப்பட்டவர்களின் அல்லது நிறுவனங்களின் திட்டங்களுக்கேற்ப நடப்பதில்லை என்றும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுதிப் போட்டியில் நடால் அதிர்ச்சித் தோல்வி

சிலி ஓபன் டென்னிஸ் போட்டி வினாடெல்மரில் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் முன்னாள் முதல் நிலை வீரரும், களிமண் தரையில் நடைபெறும் ஆட்டத்தில் கோலோச்சி வருபவருமான ஸ்பெயின் வீரர் ரபெல் நடால், அர்ஜென்டினாவின் ஹோராசி ஜிபாலோஸ்சை எதிர்கொண்டார். இடது முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக 7 மாத இடைவெளிக்கு பின்னர் களம் கண்ட ரபெல் நடால் இந்த போட்டியில் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவரது ஆட்டத்தை காண அதிக அளவில் குவிந்து இருந்த ரசிகர்கள் அவருக்கு ஆதரவாக குரல் எழுப்பினார்கள். 8-வது பிரெஞ்ச் ஓபன் பட்டத்தை கைப்பற்ற தயாராகி வரும் ரபெல் நடால் யாரும் எதிர்பார்க்காத வகையில் 7-6, 6-7, 4-6 என்ற செட் கணக்கில் ஜிபாலோஸ்சிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டார். களிமண் தரையில் நடந்த போட்டிகளில் 36 பட்டங்களை வென்றுள்ள ரபெல் நடால் இறுதி ஆட்டத்தில் தோல்வியை சந்திப்பது இது 5-வது தடவையாகும். ஜிபாலோஸ் வென்ற முதல் பட்டம் இதுவாகும். இரட்டையர் பிரிவு ஆட்டத்திலும் ரபெல் நடால் ஜோடி இறுதிப்போட்டியில் தோல்வி கண்டது. தோல்விக்கு பின்னர் ரபெல் நடால் கருத்து தெரிவிக்கையில், எல்லாம் நல்லபடியாக அமைந்தது. இறுதிப்போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்று விரும்பினேன். நான் எனது சிறப்பான ஆட்டத்தை சரியாக வெளிப்படுத்தவில்லை. நிறைய போட்டிகளுக்கு இது தொடக்கமாகும். நிறைய வெற்றிகளை இன்னும் குவிக்க முடியும் என்று நம்புகிறேன் என்று தெரிவித்தார். வெற்றி பெற்ற ஜிபாலோஸ் கூறுகையில், எனது வாழ்க்கையில் இது சிறப்பான ஆட்டம். கனவு நனவாகி இருக்கிறது. இந்த தருணத்தை வாழ்க்கையில் ஒருபோதும் மறக்கமாட்டேன் என்றார்.



# ஒலிம்பிக் போட்டியிலிருந்து மல்யுத்தம் நீக்கம்: சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி முடிவு

2020-ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியில் இருந்து மல்யுத்தத்தை நீக்க சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. சுவிட்சர்லாந்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நடப்பு ஒலிம்பிக் அட்டவணையில் உள்ள 26 விளையாட்டுக்கள் ஆய்வு செய்யப்பட்டன. அப்போது, மல்யுத்தத்தை நீக்கிவிட்டு வாள்வீச்சு, குதிரை சவாரி, நீச்சல், ஓட்டப்பந்தயம், துப்பாக்கி சுடுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய நவீன பென்டத்லான் போட்டிகளை சேர்க்க முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் இந்த முடிவு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. ஒலிம்பிக் போட்டியில் இருந்து ஏதாவது ஒரு விளையாட்டை நீக்கினால்தான், ஒரு புதிய விளையாட்டை சேர்க்க முடியும். பிரதான விளையாட்டில் இருந்து மல்யுத்தம் நீக்கப்படுவதால், 2020ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் பேஸ்பால் - சாப்ட்பால், கராத்தே, ஸ்குவா', ஸ்கேட்டிங் விளையாட்டுகள், மலையேற்றம், நீர்ச்சறுக்கு, வூஷு ஆகிய 7 மற்ற விளையாட்டுகளுடன் மல்யுத்தம் இணையும். சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் இந்த முடிவு, மே மாதம் ரஷ்யாவில் நடைபெற உள்ள செயற்குழு கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டு பரிந்துரைக்கப்படும். அதன்பின்னர் அர்ஜென்டினாவில் செப்டம்பர் மாதம் நடைபெறும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி பொதுச்சபையில் இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும். கடைசியாக 2005-ம் ஆண்டு பேஸ்-பால் - சாப்ட் பால் விளையாட்டு நீக்கப்-பட்டது. ரியோ டி ஜெனிரோவில் 2016-ல் நடைபெறும் ஒலிம்பிக்கில் கோல்ப், ரக்பி ஆகிய விளையாட்டுகள் சேர்க்கப்படுகின்றன.



# எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இந்திய தொடர் மிகப்பெரிய சவால்: கிளார்க் பேட்டி

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணித் தலைவர் 31 வயதான மைக்கேல் கிளார்க், மேற்கிந்திய அணிக்கெதிரான ஒரு நாள் தொடரின் போது காயமடைந்தார். வலது பின்னங்கால் தசைப்பிடிப்பு காரணமாக, மேற்கிந்திய அணிக்கெதிரான கடைசி ஒரு நாள் போட்டியில் விளையாடவில்லை. இந்த நிலையில் இந்தியாவுடன் 4 டெஸ்ட் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக கிளார்க் இந்தியாவுக்கு புறப்பட முன்னதாக சிட்னியில் அவர் நிருபர்-களுக்கு பேட்டி அளித்தார். அப்போது, ரிக்கிபாண்டிங், மைக் ஹஸ்ஸி ஓய்வு, காயத்தால் ஆல்-ரவுண்டர் ஷேன் வாட்சன் பந்து வீச முடியாதது, தனது காயம் ஆகியவற்றை மனதில் கொண்டு பேசிய கிளார்க், இந்திய தொடர் இதுவரையிலான தனது தலைமையில் கடினமான பணியாக இருக்கும் என்று குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:..

''முன்பை விட இப்போது நன்றாக உள்ளேன். கடந்த 4 நாட்கள் கிடைத்த ஓய்வில் காயத்தில் இருந்து தேறிவிட்டேன். அணியின் உடல்தகுதி நிபுணர் அலெக்ஸ் கவுன்டோரிசின் ஆலோசனைப்படி நடந்து வருகிறேன். இந்தியாவுக்கு சென்றாலும் எனக்கு போதிய கால அவகாசம் உள்ளது. எனவே முதல் டெஸ்டுக்குள் நான் முழு உடல்தகுதி பெற்றுவிடுவேன். இதில் எந்த சந்தேகமும் கிடையாது. முதலாவது டெஸ்ட் போட்டிக்கு முன்பாக நடைபெறும் மூன்று நாள் பயிற்சி ஆட்டத்திலும் (பிப்.18-20) விளையாட ஆர்வமாக உள்ளேன். இருப்பினும் அதற்கு முன்பாக உடல்தகுதி நிபுணரின் ஆலோச-னையை கேட்டு, அதற்கு ஏற்பதான் முடிவு செய்வேன்: தற்போதைய நிலையில் 3 நாள் ஆட்டத்தில் விளையாடுவதுதான் எனது திட்டமாகும். எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இந்த இந்திய சுற்றுப்பயணம் கடினமான சவாலாகும். டெஸ்ட் போட்டி தொடருக்காக ஒவ்வொரு முறை இந்தியாவுக்கு சென்றபோதெல்லாம் அப்பயணம் மிகவும் கடினமாகவே அமைந்-திருக்கிறது. அங்கு (இந்தியா) நிறைய போட்டிகளில் ஆஸ்திரேலியா வெற்றியும் பெற்றதில்லை. எனவே இந்த தொடர் மிகப்பெரிய சவால் என்பதை வீரர்களும் அறிவார்கள். அதை உணர்ந்து, போட்டிக்கு சிறப்பாக தயாராவதற்கும், அங்குள்ள சூழலில் பழகுவதற்கும் தான் வீரர்களை முன்கூட்டியே இந்தியாவுக்கு அனுப்பியுள்ளோம். இங்கிலாந்து அணியை போன்று இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்குவீர்களா? என்று கேட்கிறீர்கள். அது பற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது. ஆடுகளத்தின் தன்மை எப்படி உள்ளது என்பதை பார்த்த பிறகே இது குறித்து இறுதி முடிவெடுப்போம்" எனக்கூறினார்.



# இந்தியாவை சொந்த மண்ணில் வீழ்த்துவது கடினமானது.

**- ஆஸ்திரேலிய வீரர் மேத்யூ வாடே**

மைக்கேல் கிளார்க் தலைமையிலான ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவுடன் 4 டெஸ்டில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் வருகிற 22-ந்தேதி தொடங்குகிறது. இந்த டெஸ்ட் தொடருக்கு முன்பு ஆஸ்திரேலிய அணி 2 பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது. இந்த பயிற்சி ஆட்டத்துக்கு ஆஸ்திரேலிய விக்கெட் காப்பாளர் மேத்யூவாடே அணித்தலைவராக பணியாற்றினார். பயிற்சிக்கு பிறகு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:..

இந்த டெஸ்ட் தொடரில் டிராவிட், லட்சுமண் இல்லாதது எங்களுக்கு மிகப் பெரிய நிம்மதியாகும். ஓய்வு பெற்ற இந்த இருவரும் இல்லாமல் இந்திய அணியை நாங்கள் தற்போது சந்திக்கிறோம். இருவரும் பலமுறை எங்களுக்கு நெருக்கடி கொடுத்து உள்ளனர். ஒவ்வொரு டெஸ்டிலும் டிராவிட், லட்சுமணின் பங்களிப்பு இருந்தது. இந்த இருவரும் இல்லாததை நாங்கள் சரியாக பயன்படுத்திக் கொள்வோம். இந்திய ஆடுகளங்களில் இந்திய துடுப்பாட்டக்காரர்கள் சிறப்பாக ஆடுகிறார்கள். இதனால் நாங்கள் கடுமையாக போராட வேண்டியது இருக்கும். சொந்த மண்ணில் இந்தியாவை வீழ்த்துவது கடினமானது. இந்த டெஸ்ட் தொடரில் இரு அணி வீரர்களும் உணர்ச்சி வேகத்தில் வார்த்தைகளை பரிமாறி கொள்வார்கள். இது ஆட்டத்தின் ஒரு பகுதியாகும். இதை தவிர்க்க இயலாது.

இவ்வாறு மேத்யூவாடே கூறியுள்ளார்.



உங்கள் அச்சு தேவைகளை பூர்த்தி செய்ய




#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 2224933 Mob: 0715415854, 0773663103 & ssdigitals.shan@gmail.com

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ வினியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்

The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 16. 02 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.